# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 180 சுபகிருது வருடம், மாசி மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை (01.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 08, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


கமெண்ட் கந்தர்...







பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ கோருகிறார் என்ற செய்தி வெளியே வந்தமையும் அதற்கு பிரதமர் தினேஷின் அலுவலகம் மறுப்பைத் தெரிவித்தமையும் ஆளுங்கட்சிக்குள் நடக்கும் குத்துவெட்டின் வெளிப்பாடுதானாம்.

பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ தரப்பு கோரலாமென செய்திகள் வெளிவந்த கையோடு அப்படி எதுவும் பேசப்படவில்லையென்று முந்திக்கொண்டு அறிக்கை வெளியிட்டு அந்த பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்ததாம் தினேஷ் தரப்பு.

எப்படியோ பிரதமர் பதவியில் மாற்றமில்லையென்று தினேஷ் அலுவலகம் அறிவித்ததால் அதிருப்தியில் இருக்கிறதாம் ராஜபக்ஷ தரப்பு.

# பொதுச் சேவைகள் இன்று முடங்கலாம்!

## தொழிற்சங்கப் போராட்டத்தினால் நாடுதழுவிய ரீதியில் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிக்கும் அபாய நிலை

(நா.தினுஷா)

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அரச மற்றும் தனியார் ஊழியர்கள் கடந்த காலங்களில் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில், இன்று (01) நாடுதழுவிய ரீதியில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க அரச மற்றும் தனியார்துறை தொழிற்சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன.

சகல தொழிற்துறைகளும் உள்ளடங்கும் வகையில் தொழிற்சங்கங்களினால் இன்று முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக மருத்துவம், எரிபொருள், வங்கி, மின்சாரம், துறைமுகம், கல்வி உள்ளிட்ட முக்கிய துறைகள் ஸ்தம்பிதமடையுமென்று எச்சரிக்கை விடுத்துள்ள தொழிற்சங்கங்கள், இதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவித்திருக்கின்றன.

தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், மின்சாரத்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள், துறைமுக சேவையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், ஸ்ரீலங்கா ரெலிகொம்,...

02 பக்கம்

## அமைச்சர் அலி சப்ரி இந்தியாவிற்கு பயணம்



புதுடில்லியில் நடைபெறவுள்ள புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரம் தொடர்பான இந்தியாவின் முதன்மை மாநாடான ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நாளை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த மாநாடு, இந்திய வெளியுறவு அமைச்சுடன் இணைந்து பார்வையாளர் ஆய்வு அறக்கட்டளையினால் முன்னெடுக்கப்படுகின்றது.

இம் மாநாட்டின்போது, மார்ச் 03ஆம் திகதி நடைபெறவுள்ள...

02 பக்கம்

## புற்றுநோயாளர்களுக்கு விசேட வைத்தியசாலைகள் ஜனாதிபதி பணிப்பு



புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க, யாழ்ப்பாணம், பதுளை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் விசேட வைத்தியசாலைகளையும், பொருத்தமான இடத்தில் விசேட நவீனசிறுவர் வைத்தியசாலையொன்றையும் ஸ்தாபிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ், ஜனாதிபதியின்...

02 பக்கம்

## புலிகளால் இன்னும் அச்சுறுத்தல் இருப்பதாக இலங்கை கருதுகிறது

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவிப்பு




2021ஆம் ஆண்டில் இலங்கையில் பயங்கரவாதச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றபோதிலும், அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறுசீரமைக்கப்படுகின்றமை, இன்னும் அச்சுறுத்தல் என்று இலங்கை அரசாங்கம் கருதுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான...

02 பக்கம்

## தேர்தல் நடக்கும்வரை ஜனாதிபதி பிரதமர் பதவிகளில் மாற்றமில்லை

### அமைச்சர் பந்துல குணவர்தன கருத்து

(நா. தினுஷா)

நாட்டில் தேர்தலொன்று இடம்பெறும்வரை ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது என்றும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமராக தினேஷ் குணவர்தனவும் தொடர்ச்சியாக ஆட்சியில் இருப்பார்கள் என்றும் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில்...

02 பக்கம்

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணி காலவரையின்றி ஒத்திவைப்பு

வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளன.

தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை மற்றும் வாக்குச்சீட்டுகளை...

02 பக்கம்

## வங்கிக்கடன் வட்டியை மேலும் அதிகரிக்க ஐ.எம்.எவ். பரிந்துரை

### ஆனால் அரசு அதனை பரிசீலிக்கவில்லை என்கிறார் பந்துல

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின்போது, வங்கிக் கடனுக்கான வட்டியை மேலும் இரண்டரை வீதத்தால் அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் பணிப்புரை விடுத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருந்தபோதும், இந்தப் பரிந்துரைக்கு இணக்கம் காணப்படாமையின் காரணமாகவே...

02 பக்கம்

## சீனாவின் பதிலின்படியே ஐ.எம்.எவ். கடன் கிடைக்கும்

### நிதி அமைச்சு தகவல்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் கடன் வசதி, சீனாவின் பதிலிலேயே தங்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் சீனா சாதகமாக பதிலளிக்குமென எதிர்பார்ப்பதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீனாவுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டிய அனைத்து ஆவணங்களும் தயார் நிலையிலுள்ளதாகவும் சீனாவிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் சான்றிதழ் கிடைத்தவுடன், சர்வதேச நாணய நிதியத்தில்...

02 பக்கம்

## எம்மை இங்கே விட்டுவிட்டுப் போன இங்கிலாந்துக்கு மலையகத் தமிழர் தொடர்பில் தார்மீகக் கடமை உள்ளது

### பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளரிடம் மனோ கணேசன் அழுத்தமாக தெரிவிப்பு



“மலையகத் தமிழரின் பிரதான எதிர்பார்ப்பு இந்நாட்டின் தேசிய நீரோட்ட அரசியல் வரைபுக்கு உள்ளே முழுமையான பிரஜைகளாக வேண்டும் என்பதாகும்.


02 பக்கம்

## ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் பெப்ரவரி மாதத்திற்குள் வருகை

(கே.சுபானி)

இலங்கைக்கு பெப்ரவரி மாதத்துக்குள் மாத்திரம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# ஆட்சியாளர்கள் நாட்டின் தற்காலிக பொறுப்பாளர்களே அன்றி நாட்டை தன் இஷ்டம் போல் நடத்த யாருக்கும் உரிமை இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு






அரசாங்கத்தை ஆள்பவர்கள் நாட்டு மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை சார்ந்து தற்காலிக பொறுப்பாளர்களாக இருந்தாலும், தேர்தலுக்குப் பிறகு நாடு தங்களுக்கு முழு உரித்தோடு எழுதித்தரப்பட்டு விட்டது என்ற போக்கில் பலர் நினைப்பதாகவும், இந்த தற்காலிக நிர்வாகப் பொறுப்பு தேர்தலின் பின்னர் மாறுபடும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் The Blue Print பொருளாதார மாநாட்டின் மற்றுமொரு கட்ட மாநாடு நேற்று முன்தினம் (27) குருநாகல் மாவட்டத்தை இலக்காகக் கொண்டு குருநாகல் Hang Out ஹோட்டல் வளாகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு அரசியல்வாதிக்கு ஆட்சி நிர்வாகத்தின் போது இரு வழிகளிலுமான விடயப்பரப்பு பற்றிய சிறந்த புரிதல் இருக்க வேண்டும் எனவும், அந்த புரிதல் கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாக பிரயோகிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான திறமை இருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

யார் என்ன சொன்னாலும், ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் சந்தை சக்திகளை அடிப் படையாகக் கொண்ட மனிதநேய முதலாளித் துவத்தைப் பின்பற்றுவதாகவும், ஒரு நாட்டின் செல்வத்தை அரசால் அன்றி, தனியார் துறையாலேயே உருவாக்க முடியும் எனவும், இவ்வாறு உருவாக்கப்படும் செல்வம் அனைவருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மாற்றுத் தரப்பு குறித்து பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டாலும் உண்மையான மாற்றுத் தரப்பு யார் என்பது மக்களுக்குத் நன்றாக தெரியும் எனவும் மார்க்சிசம், லெனினிஸம், ஸ்டாலினிசம், டொரக்ஸிசம் போன்ற வாதங்களுக்கும் எங்கெல்ஸின் கோட்பாடுகளால் வங்குரோத்தான நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும், உற்பத்திப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களை அரசுடமையாக்கினால் நாடு மேலும் வங்குரோத்தாகிவிடும் எனவும், இந்த வகையில் எந்த நாடும் அபிவிருத்தியடையவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

எனவே ஒரு மாயைக்குப் பின்னால் சென்று, அநாதரவாக வேண்டாம் எனவும் பொய் ஏமாற்று மாயைகளால் எமது நாடு வங்குரோத்தாகி போயுள்ளதாகவும், அதன் இரண்டாவது அத்தியாயத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்காதீர்கள் எனவும், அவ்வாறு நடந்தால் நாடு இன்னொரு பாதாளத்தில் விழும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நேரத்தில் நாட்டுக்கு சிறந்த ஆட்சியே தேவை என்றும் திருட்டு, ஊழல், மோசடிகளைத் தடுத்து நல்ல முதலீட்டுச் சூழலை உருவாக்க வேண்டும் எனவும் எந்த சூழ்நிலையிலும் நாங்கள் புண்ணியத்திற்கு முதலீடுகளையோ அல்லது உதவிகளையோ பெறமாட்டோம் எனவும், இதற்கு பொருத்தமான சமூக பொருளாதார அரசியல் சூழல் உருவாக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# தனியார் வர்த்தக வங்கிகளுக்கு உலக வங்கி 400 மில்.டொலர் நிதி

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

நாட்டில் இயங்கும் மூன்று தனியார் வர்த்தக வங்கிகளுக்கு, உலக வங்கியின் கீழ் இயங்கும் அபிவிருத்தி நிதி நிறுவனத்தினால் 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்துக்கு எந்த கடன் உதவியும் கிடைக்க வில்லை. மூன்று தனியார் வங்கிகளுக்கே 400 மில்லியன் ரூபா அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வங்கிகளுக்கான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவே இந்தக் கடன் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கிக்கு கீழ் இயங்கும் அபிவிருத்தி நிதி நிறுவனத்தினால் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

### தேர்தல் நடக்கும்வரை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலொன்று இடம்பெறும் வரை, எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு முறையிலும் ஜனாதிபதி பதவி அல்லது பிரதமர் பதவியிலும் மாற்றம் ஏற்படாது. பொறுப்புடன் இந்த விடயத்தை குறிப்பிடுகிறேன்.

நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது, பெயர்களை வைத்துக்கொண்டு வேடிக்கை நிலையை உருவாக்கி, தற்போதுள்ள நிலைமையை வேறு திசைக்கு கொண்டுசெல்ல முயற்சிப்பது அநீதியான விடயமாகும் என்றார்.

### புற்றுநோயாளர்களுக்கு...

செயலாளர் சமன் ஏக்கநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, மருத்துவ ஆராய்ச்சிக்கான நவீன ஆய்வுகூடம் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பொதுச் சேவைகள்...

தபால் சேவைப்பிரிவு, தனியார் துறையினர், மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் உள்ளிட்ட 40இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளன.

பிரதான 12 நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவும், அத்தியாவசியமான சேவைகளை வழங்கும் பிரிவுகளில் கறுப்புக் கொடி பறக்கவிட்டும் கறுப்பு நிற ஆடை அணிந்தும் இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிக்க தொழிற்சங்கங்கள் தீர்மானம் எடுத்திருக்கின்றன.

அமுல்படுத்தப்பட்டுள்ள அநீதியான வரிக் கொள்கையை திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வாரத்தின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முழு நாட்டையும் முடக்கக்கூடிய கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவுள்ளதாகவும் ஏனைய பிரிவுகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அரசாங்க மருத்துவ சங்கம் உள்ளிட்ட மருத்துவ துறைசார் தொழிற்சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

18 அரச, தனியார் மற்றும் சர்வதேச வங்கிகள் இன்றைய தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் அம்பாறை, அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, காலி, கம்பஹா, யாழ்ப்பாணம், கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட 12 பிரதேசங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. மேலும் ஸ்ரீ லங்கா டெலிகொம் தொழிற்சங்கமும் இன்றைய தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அநீதியான வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களும் ஆதரவு வழங்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆசிரியர்கள் அனைவரும் இன்றைய கறுப்பு நிற ஆடைகளை அணிந்து, கறுப்புப் பட்டிகளை அணிந்து பாடசாலைகளுக்கு வருகைதருமாறு கோரப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர், அறநெறி ஆசிரியர்கள் சங்கமென்ற அடிப்படையில் பாடசாலைகள் மற்றும் பௌத்த அறநெறிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தொழிற்சங்கங்களும் இன்றைய தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்துகொள்ளவுள்ளதாக அறநெறி ஆசிரியர் சேவை சங்கம் அறிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவையை சட்டங்களை மீறுவதற்கும் தயங்கப் போவதில்லை என்றும் முடிந்ததை செய்துகொள்ளுமாறும் மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

இதேவேளை, போக்குவரத்து, துறைமுக சேவை உள்ளிட்டவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான பொதுப் போக்குவரத்துச் சேவைகள், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வரைவிலக்கணம் கூறப்பட்ட ஏதேனும் துறைமுகத்திலிருக்கும் உணவுப்பொருட்கள் அல்லது பானபொருள், நிலக்கரி, எண்ணெய் அல்லது எரிபொருள் என்பவற்றுள் ஏதாவதொன்றை பறித்தல், கொண்டுசெல்லல், தரையிறக்குதல், களஞ்சியப்படுத்துதல், ஒப்படைத்தல், அகற்றுதல், தெருக்கள், பாலங்கள், மதகுகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், புகையிரத மற்றும் விமான போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் முன்னெடுக்குமாறு அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேர்தல் திகதியை குறுகிய காலத்தில் தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும்

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார

(கே.சுபானி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான புதிய திகதியை குறுகிய காலத்துள் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்களை நடத்தும் திகதி குறித்து நாளைமறுதினம் (03) அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், இது குறித்து கலந்தாலோசிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவை அணுகியிருந்தனர்.

இதுகுறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிக்கமைய தேர்தலைகளை பிற்போடுவதாயின் 21 நாட்களுக்கு பின்னர் அதனை அறிவிக்க வேண்டும். இதன்படி தேர்தலை நடத்துவதாக கூறிய 9ஆம் திகதியிலிருந்து 21 நாட்களுக்கு பின்னர் ஒரு புதிய திகதியை அறிவிக்க வேண்டும். மிகவும் குறுகிய காலத்துள் இப்புதிய திகதியை அறிவிக்க வேண்டும் என்பதே எங்களுடைய கோரிக்கையாகவுள்ளது.

அரசியல் கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் இதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. அரசியல் கட்சிகள் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து தேர்தலுக்கு ஆயத்தமாகியுள்ளன.

இந்நிலையில் குறுகிய காலத்துள் புதிய தேர்தல் திகதியை அறிவிக்க வேண்டும். இதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே, மக்களின் வாக்களிக்கும் உரிமை மற்றும் அரசியல் கட்சிகளின் உரிமைகளை பாதுகாக்க வேண்டியது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். ஆகவே தேர்தல்கள் ஆணைக்குழு இதனை கால கிரமத்துள் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

### சீனாவின் பதிலின்படியே...

சமர்ப்பிக்கப்படும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிக்கான ஒப்புதல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஒரு இலட்சம்...

இதுகுறித்து அதிகாரசபை மேலும் தெரிவிக்கையில்,

பெப்ரவரி 26ஆம் திகதிவரை ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ள அதேவேளை, கடந்த ஜனவரி மாதம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 545 பேர் வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் அதிக எண்ணிக்கையிலானோர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் எனவும், இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையிலானோர் வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர்...

பிளவுபட்ட உலகை குணப்படுத்துதல் (Healing a Divided World) மற்றும் வாக்குறுதியின் பைட் அலகுகள்: தொழில்நுட்பம் எவ்வாறு சமூகங்களை உயர்த்துகின்றது (Bytes of Promise: How can Technology Lift Communities) ஆகிய தலைப்புகளிலான இரண்டு விஷேட குழு விவாதங்களில் அமைச்சர் பங்கேற்கவுள்ளார்.

மாநாட்டின் பக்க அம்சமாக, பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய வழிகளில் கவனம் செலுத்தும் இருதரப்புக் கலந்துரையாடல்களுக்காக அமைச்சர் பல நாடுகளைச் சேர்ந்த தனது சகாக்களையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வாக்குச்சீட்டு...

அச்சிடுவதற்கு தேவையான வசதிகள் கிடைக்காத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சம் குறிப்பிட்டுள்ளது.

தேர்லுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பு கிடைக்காமை, வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான பணம் கிடைக்காமை போன்ற காரணிகளால், அண்மை நாட்களில் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளுக்கு பாரிய தடை ஏற்பட்டிருந்தது.

தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்குமாயின் 25 முதல் 30 நாட்களுக்குள் அனைத்து வாக்குச்சீட்டுகளையும் அச்சடிக்கும் இயலுமை தமது நிறுவனத்திற்கு உள்ளதாக அரச அச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

### புலிகளால் இன்னும்...

பயங்கரவாதம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பயங்கரவாத எதிர்ப்பு திறன்களை மேம்படுத்துவதற்கும், அமெரிக்கா மற்றும் பிற சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து செயற்படுவதன்மூலம் எல்லைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் எழுச்சி இலங்கையில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும், விடுதலைப் புலிகளின் நீண்டகால செயற்பாடுகள் இலங்கையிலும் சர்வதேச அளவில் புலம்பெயர்ந்த நாடுகளிலும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் என்று இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தநிலையில், பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் இலங்கைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது குறித்து குவாட் நாடுகளான இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா என்பவற்றுடனும் ஒரே எண்ணத்தை கொண்ட பங்காளிகளுடனும் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

### எம்மை இங்கே...

சட்டப்படி நாடற்றோர் இன்று இல்லை. எல்லோருமே பிரஜைகள். ஆனால், நமது மக்கள் முழுமையான பிரஜைகள் இல்லை. எமது பாதை உள்நோக்கிய பாதை. பிரிட்டன் இலங்கை அரசுடனான தமது நல்லுறவுகளை பயன்படுத்தி எமது இந்த இலங்கை கனவை நனவாக்க உதவ வேண்டும்" என நேற்று கொழும்பில், வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் நிகழ்ந்த சந்திப்பின்போது, பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், அரசியல் அலுவலர் ஜோவிடா அருளானந்தம் மற்றும் த.மு.கூ. தலைவர் மனோ கணேசன், இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

பிரித்தானிய தரப்பினரிடம், மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

பிரித்தானியாவின் தார்மீகப் பொறுப்பு, பிரிட்டீஷ் அரசாட்சி, இம்மக்களை இருநூறு வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் தென்னிந்திய தமிழகத்திலிருந்து கொண்டு வர ஆரம்பித்ததுடன் ஆரம்பமாகிறது. அன்று முதல் எமது மக்கள், உலகம் கண்டிராத கடுமையான உழைப்பின்மூலம், இன்றுவரை மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் துறையாக இருக்கின்ற பெருந்தோட்டங்களையும், பெரும் நெடுஞ்சாலைகளையும், பாரிய ரயில் பாதைகளையும், கொழும்பு துறைமுகத்தையும் அமைத்து, அன்று சிலோன், இன்று ஸ்ரீலங்கா என்ற இலங்கையை உருவாக்கியுள்ளார்கள்.

இதற்கு பிரதியுபகாரமாக, நன்றிகெட்டத்தனமாக 1948இல் எமது மக்களின் குடியுரிமைதான் பறிக்கப்பட்டது. வாக்குரிமை தான் பறிக்கப்பட்டது. நமது மக்கள் பலவந்தமாக 1964இல் சிறிமா-சாஸ்திரி, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் நாடு கடத்தப்பட்டார்கள். இது நடக்கும்போது, சிலோன் என்ற இலங்கை ஒரு பிரிட்டிஷ் ஆதிக்க நாடாக இருந்தது. 1972இல் குடியரசு ஆகும்வரை, இலங்கையில் பிரித்தானிய அரசாட்சிக்கு பதில் சொல்லும் மகாதேசாதிபதியே ஆட்சியில் இருந்தார். 1948இன் சோல்பரி அரசமைப்பின் 29ஆம் பிரிவும் எம்மை காப்பாற்றவில்லை. ஆகவே இன்றைய பிரிட்டிஷ் அரசரின் அரசாங்கம் இலங்கை மலையக தமிழரின் மீது பாரிய தார்மீக பொறுப்பும் கடமையும் கொண்டுள்ளது.

இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் எமது பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை முழுமையாக விட்டுவிட வேண்டாம். அது சரிவராது. இந்தியா ஏற்கனவே, இலங்கையுடனான தமது நட்புறவை எமது விஷயத்திலும் அவ்வப்போது பயன்படுத்துகிறது. ஆனால், அது எமக்கு போதாது. அவர்களுக்கு அவர்களது சொந்த தேசிய கரிசனைகள் அநேகம் உள்ளன. அவை எமது விஷயங்களை விட முன்னுரிமை கொண்டவை. எமக்கு அவை தெரியும்.

தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத காரணத்தால், நாம் ஒதுக்கப்படுகிறோம். எமக்கு பிரிட்டிஷ் உதவியும் தேவை. பிரிபடாத ஒரே இலங்கைக்குள் எமது சமூக அரசியல் அபிலாஷைகளை அடையவும், கடந்த காலங்களில் இழந்த உரிமைகளை பெறவும் நாம் பாடுபடுகிறோம். எமது மக்கள் சனத்தொகையில் மூன்றிலொன்றுக்கு குறைவில்லாத பிரிவினர் இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். ஒட்டுமொத்த இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினராக அவர்கள் இருக்கின்றார்கள். ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் நவீன கொத்தடிமை தொடர்பிலான விசேட அறிக்கையாளர், ஐ.நா. நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியவை முன்வைத்துள்ள கணிப்பீடுகளின்படி, இந்த துன்பகரமான உண்மைகள் உலகறிய செய்யப்பட்டுள்ளன. ஆகவே பிரிட்டிஷ் அரசு, விசேட ஒதுக்கீட்டு திட்டங்களின் அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிட வேண்டும்.

நாங்கள் இந்நாட்டில் முழுமையான பிரஜைகளாக உதவுங்கள். நம் நாட்டிற்கு நீங்கள் வாழ்வாதார உதவிகள் வழங்கும் போது, இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினரான, பெருந்தோட்ட பாமர மக்களுக்கு அவை கிடைக்கின்றனவா என கேள்வி எழுப்புங்கள். தேடுங்கள். எமக்காக இலங்கை அரசுடன் பேசுங்கள். நாம் இல்லாமல் இலங்கை முழுமையடையாது என்பதை இனிமேல் மனதில் கொள்ளுங்கள்.

### வங்கிக்கடன் வட்டியை...

வங்கிக்கடன் வட்டி வீதம் இதுவரையில் அதிகரிக்கப்படவில்லை என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்கிக்கடன் வட்டி வீதம் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுவதில்லை. அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் வங்கிக்கடன் வட்டி வீதத்தை குறைத்துக் கொடுப்பதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்குவார்கள். அறியாமையின் காரணமாகவே அவ்வாறான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள்.

ஆனால், வரி தொடர்பான சட்டத்திட்டங்களின் பிரகாரம் கடனுக்கான வட்டி வீதங்களை மத்திய வங்கியே தீர்மானிக்கின்றது. மத்திய வங்கியின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே கொள்கை அடிப்படையிலான வட்டி வீதம் மற்றும் வங்கிக்கடன் வட்டி வீதம் என்பன தீர்மானிக்கப்படுகின்றன. அதேபோன்று, வட்டி வீத அதிகரிப்புக்கான உத்தரவுகளையும் மத்திய வங்கியே வழங்கும். பணவீக்கத்தின் அடிப்படையில் வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியதும் வட்டி வீதத்தை குறைக்க முடியாது. இது தொழில்நுட்ப ரீதியான விடயமாகும். ஆகவே, மத்திய வங்கிக்கு முன்பாகச் சென்றே ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்.

நான் அறிந்தவகையில், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது வங்கிக்கடன் வட்டி வீதத்தை மேலும், இரண்டரை வீதத்தால் அதிகரிக்குமாறு நாணய நிதியம் உத்தரவு வழங்கியுள்ளது. இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட தரப்பினர் அதற்கு இணக்கம் தெரிவிக்காமையினாலேயே தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

பணவீக்கத்தை நிர்வகிப்பதனூடாக வட்டி வீதத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியும் ஆலோசனை வழங்கியிருக்கிறார். அதற்கு காரணம், நாடொன்றின் அபிவிருத்திக்கு கடன் வட்டி வீதம் தனி இலக்கங்களில் குறிப்பிடப்பட வேண்டும் என்ற அடிப்படை தத்துவம் இருக்கிறது. அந்த அடிப்படை தத்துவத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் சுற்றுலாத்துறை, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள், வீட்டுக் கடன் பெற்றவர்கள், வாகனங்களுக்காக கடன் பெற்றுக்கொண்டவர்கள் என சகல தரப்பினருக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

## கைத்தொலைபேசியை திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிளை எட்டி உதைத்து காயப்படுத்தி அவரது கைத்தொலைபேசியை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் மஹபாகே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்குரிய பொலிஸ் கான்ஸ்டபிளின் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மஹபாகே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடமைக்கு வருகை தந்து, பின்னர் சாதாரண உடையில் எவருக்கும் தெரிவிக்காமல் கடவத்தை பகுதியில் இடம்பெற்ற இசைக் கச்சேரியை காணச் சென்றதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அங்கு கச்சேரி பாதுகாப்புக்காக பொலிஸ் சீருடையில் வந்த பியகம பொலிஸ் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு காலால் உதைத்து காயப்படுத்திவிட்டு அவரது கைபேசியை திருடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கான்ஸ்டபிள் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் களனி பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 430 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில்

## 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை

எதிர்வரும் காலங்களில் நாட்டில் தரிசு நிலங்களை மீள் நடவு செய்வதற்கு 430 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இத்தொகையை 2023ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 12,500 ஏக்கர் தரிசு நிலங்களில் மீண்டும் நடவுசெய்ய வேளாண் வளர்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக பயிரிடப் படாமல் கிடப்பில் போடப்பட்ட 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன. குறித்த நிலங்களில் பயிர்ச்செய்கையை மீளவும் மேற்கொள்ள முடியும்.

ஆனால், மீள பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத 50 ஆயிரம் ஏக்கர் வயல்கள் தரிசாக மாறியுள்ளன.

தரிசு நிலங்களாக இருக்கும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடிய சுமார் 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களில் வருடா வருடம் அரச நிதியைப் பயன்படுத்தி நெற் பயிர்ச்செய்கையை மீள் நடவு செய்வதே இலக்கு என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



மேற்கூறப்பட்ட தரிசு நிலங்களில் பயிரிடுவதற்குத் தேவையான தொழில்நுட்பம், நிதி ஒதுக்கீடுகள், விதைகள் மற்றும் இதர உள்ளீடுகளை வேலையற்ற இளைஞர்களுக்கு இலவசமாக வழங்கி, தங்களுக்கு விருப்பமான பயிரைப் பயிரிட முடியுமென விவசாய அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கலட்டிப் பிள்ளையார் ஆலய இரு உண்டியல்கள் திருட்டு

யாழ்ப்பாணம், தென்மராட்சி, மீசாலை வடக்கு வேம்பிராயில் அமைந்துள்ள கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் இரண்டு உண்டியல்கள் உடைத்துப் பணம் திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி ரூ. 30 இலட்சம் மோசடி செய்தவர் வட்டவளையில் கைது

### மார்ச் 8 வரை விளக்கமறியல்

(கலஹா நிருபர்)

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 10 பேரிடம் 30 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று ஏமாற்றிய நபர் ஒருவரை எதிர்வரும் மார்ச் மாதம் 08ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா உத்தரவிட்டார்.

இதன்போது வட்டவளை கடவல தோட்டப்பிரிவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே நேற்று முன்தினம் (27) மேற்படி விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர் குழுவாக இணைந்து கம்பளை, கேகாலை, கினிகத்தேனை, நாவலப்பிட்டி, தலவாக்கலை, பொகவந்தலாவை உட்பட நாட்டில் பல பாகங்களிலும் 30 பேரை ஏமாற்றி சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தைப் பெற்று ஏமாற்றியுள்ளதாக தெரியவருவதோடு, அதில் கம்பளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற 10 முறைப்பாடுகள் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சந்தேகநபரும் குழுவினரும் இணைந்தே நாட்டின் பல பாகங்களிலும் மலேசியா உட்பட வெளிநாடுகளுக்கு வேலைக்கு ஆட்கள் அனுப்புவதாகக் கூறி நபர் ஒருவரிடமிருந்து 2 இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபா வரை பெற்றுள்ளதோடு, நேர்முகப் பரீட்சை மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் என்பனவும் மேற்கொண்டு, விமான ரிக்கட்டுகளின் நகல்களையும் வழங்கி யுள்ளதாகத் தெரியவருகிறது. இறுதியாக கடந்த 22ஆம் திகதி கம்பளை நகரிலும் நேர்முகப் பரீட்சை, மருத்துவப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட சந்தேக நபருடன் தொடர்புடைய ஏனையவர்களையும் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் கம்பளை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஏழு இலட்ச ரூபா பெறுமதியான மாம்பழங்களை திருடிய நால்வர் கைது

சூரியவெவ மதுனாகல பிரதேசத்தில் 20 ஏக்கர் காணியில் பயிரிடப்பட்ட சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான மாம்பழங்களை பதுங்கியிருந்து திருடிய சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் (27) காலை 6 மணியளவில் காரில் வந்து மாம்பழச் செய்கை பகுதிக்குள் நுழைந்து மாம்பழங்களை உடைத்துச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். பண்ணையின் உரிமையாளருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, பிரதேசவாசிகளுடன் சேர்ந்து சந்தேகநபர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சூரியவெவ மற்றும் ஹொரண பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் 14 வயதுடைய பாடசாலை மாணவனும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் சூரியவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தாதியிடம் பாலியல் சேஷ்டை புரிந்த பொலிஸ் பரிசோதகர் அளுத்கமவில் கைது

பஸ்ஸில் பயணித்த பயிலுநர் தாதியொருவரின் உடலை ஸ்பரிசம் செய்த குற்றச்சாட்டில் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை வலயத்துக்குட்பட்ட பொலிஸ் நிலையமொன்றின் முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் 54 வயதுடைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் பயணித்த பயிலுநர் தாதி ஒருவருக்கு குறித்த பொலிஸ் பரிசோதகர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளதாக குறித்த தாதி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சக பயணிகள் குறித்த பொலிஸ் அதிகாரியை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை களுத்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

## 23 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்னுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒருவர் கைது



கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து நேற்று (28) காலை பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

23 கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் 26 வயதான பொலிவியப் பெண் கைதுசெய்யப்பட்டதாக சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர் நேற்றுக்காலை டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கொண்டுவரப்பட்டுள்ள கொக்கெய்ன் கரைசலில் கொக்கெய்ன் போதைப்பொருளின் செறிவு அதிகமாக காணப்படுவதாக சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருள் கையிருப்பு 04 கிலோ 600 கிராம் எடையுடையதுடன், அவற்றின் பெறுமதி 230 மில்லியன் ரூபா அல்லது 23 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருளை இலங் கைக்கு கொண்டுவருவதற்காக 500 அமெரிக்க டொலர்களை அவர் பெற்றுக்கொள்ள விருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

### தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் மாசி மாதம் 17ஆம் நாள் புதன்கிழமை

| | |
|---|---|
| மேஷம் | சகோதரர்களால் உதவி உண்டு, தடைப்பட்டிருந்த காரியத்தால் வெற்றி. |
| ரிஷபம் | மனக்குழப்பம் வேண்டாம், பணம் கைமாறுவது கவனம். |
| மிதுனம் | புதிய நண்பர்களால் உதவிகள் உண்டு, தைரியத்துடன் செயல் படுவீர்கள். |
| கடகம் | செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள், பிரயாணத்தில் கவனம் வேண்டும். |
| சிம்மம் | தொழில் வியாபாரம் சிறப்புறும், எதிர்பாராத தன வரவு. |
| கன்னி | நீங்கள் விருப்பியது கிடைக்கும், தொழில் நன்மைகள் உண்டு. |
| துலாம் | சொத்துகளால் சிக்கல், பிரயாணத் தால் தொல்லைகள். |
| விருச்சகம் | பணம் கொடுக்கல் வாங்கலில் சிக்கல், வாய் வார்த்தைகளால் தொல்லை. |
| தனுசு | நீண்ட நாள் காதலில் வெற்றி, புகழ், கீர்த்தி உயரும். |
| மகரம் | உடல் நோய் குணமடையும், நினைத்ததை சாதிப்பீர்கள். |
| கும்பம் | ஏதோ ஒன்றை இழந்துவிட்டதைப் போல் உணருவீர்கள், வரவுக்கு மீறிய செலவுகள். |
| மீனம் | வீடு, வாகனங்களால் தொல்லைகள் அல்லது செலவுகள், தாயின் உடல் நிலை பாதிப்பு. |

**திதி** : தசமி முழுவதும்

**நட்சத்திரம்**: மிருகசீரிடம் மு.ப.9.51 வரை பின் திருவாதிரை

**யோகம்** :சித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை**:தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்**:மு.ப. 9.25 – 10.25 மணி வரை

**ராகு காலம்**:12.25 – 1.55 மணி வரை

**எமகண்டம்**:7.55 – 9.25 மணி வரை

**குளிகை** :10.55 – 12.25 மணி வரை

**சந்திராஷ்டமம்** : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்:** ரோஹிணி, அத்தம், திரு வோணம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## இந்திய அரசின் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரல்

இந்திய அரசினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023 – 2024 கல்வி ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதிவரை மாணவர்கள் இதற்காக பதிவுசெய்ய முடியுமென இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் சார்பில் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையினால் வழங்கப்படும் வழங்கும் இந்தத் திட்டத்தில் நேரு நினைவு புலமைப்பரிசில், மௌலானா அசாத் புலமைப்பரிசில், ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம் உள்ளிட்ட 03 திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளாதாரம், மனித வளம் உள்ளிட்ட துறைகள் நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டத்தில் அடங்குகின்றன.

மௌலானா அசாத் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் குறித்த பாடங்கள் தொடர்பான முதுகலை பட்டப்படிப்பிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பொறியியல், தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பட்டப்படிப்பைத் தொடர முடியுமென கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளாதாரம், வர்த்தகம், மனித வள / சமூக விஞ்ஞானம் மற்றும் கலை உள்ளிட்ட துறைகளில் கலாநிதி பட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பும் இலங்கை மாணவர்களுக்குக் கிட்டியுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு: https://bit.ly/3Sy6dTR

## இலங்கை விமானப்படைத் தளபதியுடன் பாகிஸ்தான் கடற்படைத் தளபதி சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி இலங்கை விமானப்படைத் தளபதியை சந்தித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாக்கிஸ்தான் கடற்படை தளபதி அட்மிரல் முஹம்மது அம்ஜத் கான் நியாசி கடந்த 2023 பெப்ரவரி 27ஆம் திகதி இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சனவை விமானப்படைத் தலைமயகத்தில் வைத்து சந்த்தித்தார்.


வருகை தந்த பாகிஸ்தான் கடற்படைத் தளபதியை கொழும்பு விமானப்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி எயார் கொமடோர் சுரேஷ் பெர்னாண்டோ தலைமையில் விமானப்படை வர்ண அணிவகுப்பு படைப்பிரிவின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.



இந்தச் சந்திப்பின்போது இருதரப்பினருக் குமான கலந்துரையாடலின் பின்பு இந்த சந்திப்பை நினைவுகூரும்வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறப்பட்டன. மேலும் பாகிஸ்தான் கடற்படைத் தளபதி விமானப்படை பணிப்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## சுயதொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க யாழ். சர்வதேச விமான நிலையத்தில் கடைத்தொகுதி

### வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதி





வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர விற்பனைத் தொகுதி விரைவில் அமைத்துக் கொடுக்கப்படும் - என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், ஆளுநர் செயலக வழிகாட்டலில் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக் கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் சிறந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொழும்புக்கும் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கு யாழ். சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர உற்பத்திக் கூடாரத்தை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று கொழும்பிலுள்ள மது அலுவலகத்திலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் தொடர்பில் விளம்பரப்படுத்தி ஓடர்களை வடக்கிலிருந்து அனுப்பக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். மூன்றாவது தடவையாக ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக்கூடங்கள் நிறுவப்பட்டு விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்று வருகிறது.

அதேபோன்று யாழ். புதிய பஸ் நிலையம் மற்றும் யாழ். கலாசார மண்டபம் ஆகிய பகுதிகளிலும் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து தொடர்ச்சியாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில். 45 நாட்களேயான குழந்தை உயிரிழப்பு

### உடற்கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைப்பு

பிறந்து 45 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம், பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் நாகவேலவன் எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.

பால் குடித்து சிறிதுநேரத்தில் குழந்தை மயக்கமுற்றுள்ளது.

அதனையடுத்து பெற்றோர் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. குழந்தையின் உயிரிழப்புக்கு காரணம் கண்டறியப்படாத நிலையில், உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மார்ச் 01ஆம் திகதி, புதன்கிழமை

# வேலியே பயிரை மேயலாமா?

இறக்குவானையிலுள்ள சிறுவர் இல்லத்தில் 11 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கொடக்கவெல பிரதேச செயலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சிறுவர் இல்லத்தின் கண்காணிப்பாளரின் கணவரான சந்தேகநபரை இரத்தினபுரி சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் கைதுசெய்தது.

11 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி, மருத்துவப் பரிசோதனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளமையும் தெரியவந்தது.

கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகக் கூறப்படும் சிறுமியொருவர் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்ததாகவும், 18 வயது நிறைவடைந்ததையடுத்து அவர் சிறுவர் இல்லப் பொறுப்பாளரின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

53 வயதுடைய சந்தேகநபர் இறக்குவானை எரிபொருள் நிலையத்தில் பணியாற்றியபடி இந்த துர்நடத்தையில் ஈடுபட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் பெல்மதுளை நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் சமத் சுரவீர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் மார்ச் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் இப்படித்தான் துஷ்பிரயோகங்கள் அமைதியாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

ஆதரவற்ற பெண்கள், கைவிடப்பட்ட முதியோர், வீதிகளில் இரந்துண்டு வாழ்பவர்கள், மதுவுக்கு அடிமையானவர்கள், மனநலம் குன்றியவர்கள், அனாதைச் சிறுவர்கள் உள்ளிட்டவர்களைப் பாதுகாக்கிறோம் அடைக்கலம் தருகிறோம் என்கிற பெயரில் காப்பகத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள். அதன் பிறகு அவர்களைக் கொடுமைப்படுத்துவது, பாலியல் கொடுமைக்கு உட்படுத்துவது, அடிமைகளாக வேலை வாங்குவது என்று பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்துகிறார்கள்.

சிறுவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாத்து அவர்களுக்கு சிறந்த சூழல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதென்பது இன்றைய சமுதாயம் எதிர்நோக்கும் பாரிய சவால்களில் ஒன்றாகும். இந்த சவாலை வெற்றி கொள்ளும் கடினமான பாதையில் பயணிக்கவேண்டிய கட்டாயம் நிலவுகிறது. ஒவ்வொரு பிள்ளையும் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவது நம் அனைவர் மீதுள்ள பொறுப்பாகும்.

இன்று இலங்கை உட்பட பல நாடுகளிலும் சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற கவலைக்குரிய பிரச்சினைகளைப் பார்க்கும்போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பாரிய இடைவெளியொன்று ஏற்பட்டுள்ளதை உணர முடிகின்றது. தற்போது நிலவுகின்ற இந்த அச்சுறுத்தல் தொடருமாக இருந்தால் நாகரிகமற்ற ஓர் உலகமே நமக்கு மிஞ்சும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான பிரதான பாத்திரங்களாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும் செயற்படுகின்றன. இவை தவிர அரச சார்பற்ற நிறுவனங்கள், சங்கங்கள் என்பனவும் செயற்படுகின்றன. சர்வதேச ரீதியாக யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன சிறுவர் உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்றன. ஆனால், சிறுவர் துஷ்பிரயோகம் மீதான குற்றச்சாட்டுகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சிறுவர்கள் பெரியவர்களைவிட சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பகுத்தறிவிலும் குறைந்தவர்கள்.

சிறுவர்களுடைய இந்த மனோபாவத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிற சில கயவர்கள் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்ய முனைகின்றனர். சிறுவர்களை சொல் ரீதியாக ஏசுதல், அவர்களிடம் ஆபாச வார்த்தைகளைக் கூறுதல், தவறான நோக்கத்துடன் சிறுவர்களைத் தொடுதல் அல்லது தீண்டுதல், தனிமைப்படுத்தல் மற்றும் சிறுவர் களின் விருப்பத்துடனோ விருப்பமின்றியோ பாலியல் உறவு கொள்ளுதல் போன்றவைகூட தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்.

சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்களில் 90 வீதமானவை இடம்பெறுவது பிள்ளை மிகவும் அறிமுகமான அல்லது பிள்ளையுடன் ஏதேனுமொரு தொடர்பைக் கொண்டுள்ள ஆள் மூலமாகும். பிள்ளை எந்த ஒரு வகையிலும் அறியாத ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் 10 வீதமாகும். சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதில் உள்ள மோசமான சவால் இதுவாகும்.

அந்த அடிப்படையில் இறக்குவானை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதியை நிலைநாட்ட சமூக ஆர்வலர்கள் முன்வரவேண்டும். இலஞ்சம் மோசடிகளுக்கு இடமளியாது பாதுகாப்புத்துறையினரும் இதன் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதே துஷ்பிரயோகத்தை வேறு இனத்தவர் செய்திருந்தால் இந்நேரம் தமிழ்ச் சமூகம் பொங்கி எழுந்திருக்கும். ஆனால், தமிழ்ச் சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்த சந்தேகநபர் தமிழர் என்பதால் அடக்கி வாசிக்கப்படுகிறது போலும். வேலியே பயிரை மேய்தல் இனியாவது நிறுத்தப்படவேண்டும்.

# தேர்தல்கள் ஒத்திவைப்பு முறைமையானது மாற்றத்துக்கான தேவையை தடுத்துவிடாது



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மிகவும் சாதுரியமான முறையில் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக அரசாங்க ஆதரவாளர்கள் திருப்திப்படுகிறார்கள் போன்று தெரிகிறது.

ஒத்திவைக்கப்படுவதற்கு தேர்தல் ஒன்று இருக்கவேண்டும். அவ்வாறு எதுவும் இல்லை என்று அவர்கள் நிராகரிக்கிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தினமாக மார்ச் 9ஆம் திகதியை அறிவித்த கடிதத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களும் கைச்சாத்திட்டிருக்கின்ற போதிலும் கூட. அந்த திகதி குறித்து தீர்மானிப்பதற்கு கூட்டப்பட்ட கூட்டத்தின் பதிவுகளை வைத்திருக்கவில்லை என்றும் கூட்டத்தில் குறைந்தபட்ச நிறை எண் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என்றும் அரசாங்க ஆதரவாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவைக் குறைகூறுகிறார்கள்.

தேர்தல் செலவினங்களுக்கு ஒதுக்குவதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை என்று இரண்டாவது வாதம் ஒன்றும் முன்வைக்கப்படுகிறது. இருக்கின்ற சொற்ப பணத்தை ஒதுக்குவதற்கான அத்தியாவசிய சேவைகள் என்று குறிப்பிட்டு சில சேவைகளை அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கிறது. அவற்றில் ஒன்றாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இல்லை. வங்குரோத்து நிலையில் இருக்கும்போது தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பது நாட்டுக்கு கட்டுப்படியாகாது என்று அரசாங்கம் வாதிட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த இரு வாதங்களும் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படவேண்டியவைதான் என்று மக்களில் பெரும்பான்மையானவர்களை நம்பவைக்கப் போதுமானவை என்று அரசாங்கம் நம்பிக்கை கொள்ளக்கூடும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திட்டமிட்டபடி மார்ச் 9இல் நடத்தப்பட்டால் அரசாங்கக் கட்சிகள் படுமோசமான தோல்வியைச் சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை. கடந்த வருடம் நாடு சந்தித்த பொருளாதார வீழ்ச்சி மற்றும் மக்களில் பெரும்பாலானவர்களை மோசமாக பாதிக்கின்ற வகையில் ஏற்றத்தாழ்வாக செய்யப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளுக்கு பிறகு அரசாங்கத்தின் செல்வாக்கு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டே வந்திருக்கிறது.

அண்மைய கருத்துக்கணிப்பு ஒன்றின் பிரகாரம் அந்த வீழ்ச்சி பத்து சதவீதத்துக்கும் அதிகமானதாகும். தங்களது மக்கள் செல்வாக்கு தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்பதை அரசாங்க தலைவர்கள் அறிவார்கள். கருத்துக்கணிப்பு முடிவுகளுக்கு அப்பால் புலனாய்வு சேவைகளிடம் இருந்தும் அவர்களுக்கு அறிக்கைகள் கிடைத்துக்கொண்டிருக்கும். அரசாங்கத்தின் மக்கள் செல்வாக்கு எந்தளவுக்கு குறைந்துகொண்டுபோகிறதோ, அந்தளவுக்கு அது பாதுகாப்புப் படைகளில் தங்கியிருக்கும் போக்கும் அதிகரிக்கும்.

அதன் விளைவாக, தேர்தல்களை ஒத்திவைப்பதில் அரசாங்கம் கண்ட வெற்றி அதற்காக அது மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தகுதியானதல்ல. அரசாங்கத்தின் நம்பகத்தன்மைக்கு பெரும் பாதிப்பைக் கொண்டுவரக்கூடியது எனலாம். தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தவறியதை எதிர்த்து எதிரணி கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் அதிகரி ப்பது சாத்தியம். ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கைகளின் கடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகள் மற்றும் தேர்தல்களை நடத்துவதற்கு காட்டும் எதிர்ப்பு பற்றிய சர்வதேச ஊடகங்களின் பார்வை அனுகூலமானதாக இல்லை. ''வங்குரோத்து அடைந்த இலங்கை, தேர்தல்களை ஒத்திவைக்கிறது'' என்பதே சர்வதேச ஊடகங்கள் பலவற்றின் செய்திகளின் தலைப்பாக இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்காக அரசாங்கம் தொடர்ந்து காத்துக்கொண்டேயிருக்கிறது. ஆனால், அது தொடர்ந்து பிற்போடப்பட்டுக்கொண்டே போகிறது. இந்த நிலைமை நாட்டின் உறுதிப்பாடு குறித்து பொதுவில் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் குறிப்பாக சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியிலும் நம்பிக்கையை தோற்றுவிக்கப் போவதில்லை.

**தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி**

அரசாங்கத்தின் அடக்குமுறை அதிகரித்துக்கொண்டுபோகும் நிலையில், தீவிர போக்குடைய கட்சிகளுக்கே மக்களின் ஆதரவு அதிகரிக்கும். தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பெருமளவில் வெற்றியைப் பெறக்கூடிய சாத்தியத்தைக் கொண்ட தேசிய மக்கள் சக்தி, வீதிப் போராட்டங்களில் இறங்கியிருக்கின்றது.

அவர்களது ஆர்ப்பாட்டங்களை பொலிஸார் தடுத்து தாக்குதல் நடத்தி விரட்டியடிக்கிறார்கள். தொலைக்காட்சிகளிலும் இணையத்திலும் மக்களின் தனிப்பட்ட கைபேசிகளிலும் வேதனைதரும் காட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன. முதலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாக செல்வதற்கு தெரிந்தெடுக்கும் வீதிகளுக்கு குறுக்கே பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிந்து நிற்கிறார்கள். பிறகு கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தையும் நீர்ப்பீரங்கி தாக்குதல்களையும் நடத்துகிறார்கள். இறுதியாக தடியடி நடத்தும் பொலிஸார் துரதிர்ஷ்டவசமாக பிடிபடும் ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்து குண்டுக்கட்டாக வாகனங்களில் ஏற்றுகிறார்கள்.

மக்கள் கிளர்ச்சியும் பயங்கரவாதமும் கலந்த போராட்ட முறை மூலமாக கடந்த காலத்தில் இரு தடவைகள் அரசாங்கத்தை எதிர்கொண்ட வரலாற்றையுடைய ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) அவதாரமான தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கணிசமானளவு தப்பெண்ணங்கள் தொடருகின்றன. அந்த இரு கிளர்ச்சிக் காலகட்டங்களிலும் அரசாங்க சொத்துகள் தீக்கிரையாகின. அரசாங்கமும் கிளர்ச்சிக்காரர்களும் படுமோசமான வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர். தேசிய மக்கள் சக்தியை எதிர்ப்பவர்கள் - அரசாங்கமும் எதிர்க்கட்சியும் - கடந்தகால பயங்கரங்களை சாத்தியமானளவுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அமைதிவழி போராட்டங்களை செய்பவர்களுக்கு எதிரான கடந்த பல மாதகால பொலிஸாரினதும் பாதுகாப்புப் படைகளினதும் தாக்குதல்களின் காட்சிகள் மக்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்துகின்றன. மகாத்மா காந்தி இன்று உயிருடன் இருப்பாரேயானால் முதலில் கைதுசெய்யப்படுபவர்களில் ஒருவராக அவரும் இருப்பார். அவர் மக்களின் சீற்றத்தை தூண்டியிருப்பார். அடக்குமுறையாளர்களின் மனச்சாட்சியை தட்டியெழுப்பவும் அவர் முயன்றிருப்பார். தேசிய மக்கள் சக்தி இன்று அத்தகைய ஒரு பாத்திரத்தையே வகிக்கிறது. ஜனநாயகத்துக்கான போராட்டம் அகிம்சை வழியிலானதாக இருக்கவேண்டியது முக்கியமானதாகும்.

நாட்டு மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை அரசாங்கம் இழந்துகொண்டுபோவது இலங்கையின் ஜனநாயகத்துக்கோ அல்லது அதன் பொருளாதார நலனுக்கோ உதவப்போவதில்லை. தினமும் காலைவேளையில் பாடசாலைக்கு செல்லும் வழியில் தனது மூன்று சிறிய பிள்ளைகளுக்கு ஒரு பக்கெட் மாரி பிஸ்கட்டையும் ஒரு பக்கெட் பாலையும் வாங்குவதற்கு தான் படுகின்ற பாட்டைப் பற்றி முச்சக்கரவண்டி சாரதியொருவர் வெளிப்படுத்திய ஆதங்கத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்போது அந்த பொருட்களின் விலைகள் மூன்று மடங்கு அதிகரித்திருக்கும் அதேவேளை அவரது வருமானத்தில் எந்த முன்னேற்றமும் கிடையாது.

அதனால் அவர் மூன்று பிள்ளைகளுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பக்கெட் பிஸ்கட்டையும் பாலையும் இப்போது வாங்கிக்கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. அவர்களில் பெரிய பிள்ளையினால் பிரச்சினையை புரிந்துகொள்ள முடியும். மற்றைய இரு பிள்ளைகளும் நிலைமையை விளங்கிக்கொள்ளக்கூடியவர்கள் இல்லை. அந்த தந்தை அரசாங்க தலைவர்களை சபித்தார். இது ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம். இப்போது அவரை நான் சந்தித்தால் , வறியவர்களுக்கான மின்சாரக்கட்டணம் மூன்று மடங்கிற்கு அதிகமாகவும் பணவசதியுடையவர்களுக்கான மின்சாரக்கட்டணம் சுமார் 50 சதவீதத்தினால் மாத்திரமும் அதிகரித்திருக்கும் நிலையில், அவர் அரசாங்க தலைவர்களை மேலும் கூடுதலாக சபிப்பார் என்பது நிச்சயம்.

**ஒத்திவைப்பை மீளாய்வு செய்க**

அந்த முச்சக்கர வண்டிச்சாரதி போன்ற மக்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்கள் யாருக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதைப் பொறுத்தவரை எந்தக் கேள்விக்கும் இடமில்லை. கடந்த வார இறுதியில் நான் இரத்தினபுரியில் இருந்தேன். ஊழல்தனமான உள்ளூர் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்புவதற்கு மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக நான் சந்தித்த சமூகத்தலைவர்கள் கூறினார்கள். இத்தகைய அபிப்பிராயத்தை வடக்கில் சமூக மட்ட ஆய்வுகளைச் செய்கின்ற ஒரு கல்விமானிடம் இருந்தும் நான் கேட்டேன். பழையவர்களை அகற்றிவிட்டு புதியவர்களை கொண்டுவருவதற்கு மக்கள் தேர்தலை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் சொன்னார்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ளூர் மட்டத்தில் எதிர்பார்ப்புகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் இடையிலான இந்த சங்கமத்தை நான் கண்டேன். அவர்கள் மார்ச் 9 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து நிச்சயம் வெறுப்பும் விரக்தியும் அடைவார்கள். வடக்கிலும் தெற்கிலும் தங்களது உள்ளூர் மட்டங்களில் இருந்து முறைமை மாற்றத்தை தொடங்க மக்கள் விரும்புகிறார்கள்.

கடந்த கால ஜே.வி.பி. கிளர்ச்சிகளுக்கும் தற்போது வீதிப்போராட்டங்களில் இறங்கியிருக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டங்களுக்கு வருகின்ற இளைஞர் - யுவதிகளில் பெரும்பாலானவர்களுக்கு கடந்த காலத்துடன் நேரடித் தொடர்பு கிடையாது. அவர்கள் ஒரு முறைமை மாற்றத்துக்காக (System Change) - பிரதானமாக கடந்த நான்கு தசாப்தகாலமாக ஆட்சிமுறையை உருவகப்படுத்தி நிற்கும் ஊழலுக்கும் தண்டனையின்மைக்கும் ஒரு முடிவைக் கட்டுவதற்காக அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அவர்கள் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான செயன்முறையின் ஓர் அங்கமாகப் பார்க்கிறார்கள். முறைமை மாற்றம் பல மட்டங்களில் இருக்கலாம். அத்தகைய மாற்றத்தை விரும்பாதவர்களுக்கு எதிராக அரசியல் கட்சிகள் ஐக்கியப்பட்டுவருகின்றன. தேசிய மக்கள் சக்தியின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசியல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையிலான அவர்கள் மீதான அண்மைய பொலிஸ் தாக்குதல்களைக் கண்டனம் செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இத்தகைய சூழ்நிலைகளில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் மீளாய்வு செய்யவேண்டியது அவசியமாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான பணத்தை அரசாங்கம் தேடிக்கொடுக்கும் என்று மக்களுக்கு உறுதியளிப்பதன் மூலமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதிர்ச்சியும் விவேகமும் உடைய ஒரு மதிப்பார்ந்த அரசியல் தலைவராக தன்னை காட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களை நடத்துவதில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் துடிப்பான ஆதரவை வழங்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் மீட்டெடுக்க முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான புதிய திகதியொன்றை மார்ச் 3ஆம் திகதி தருவதாக தேர்தல் ஆணைக்குழு கூறியிருக்கிறது. அவ்வாறு அறிவிக்கப்படக்கூடிய திகதியே உண்மையில் அந்த தேர்தல்கள் நடைபெறுகின்ற திகதியாக இருக்கவேண்டியது தேசிய நலன்களுக்கு உகந்ததாகும். சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களே ஜனநாயகத்தின் அடித்தளமாகும். அதை பேணிப் பாதுகாத்துப் போற்றுவதன் மூலம் அரசாங்கத்தின் ஜனநாயக சான்றாதாரங்களை வலுப்படுத்தமுடியும். அதன் மூலமாக சர்வதேச சமூகம் அதன் ஒருமைப்பாட்டையும் பணத்தையும் இலங்கையில் முதலீடு செய்யக்கூடியதாக நம்பிக்கையைக் கட்டியெழுப்பமுடியும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

## தவக்கால சிந்தனை

### திருச்சிலுவையின் மகிமை



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உரோமையர்கள் எக்ஸ் க்ருசே (சிலுவையிலிருந்து) என்பார்கள். மனிதர்கள் பார்வையில் அருவருப்பான ஒன்றை இன்று நாம் மகிமையின் சின்னமாகக் கொண்டாடுகிறோம். சிலுவை நம் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்று. எங்கு பார்த்தாலும் சிலுவை நம் கண்முன் நிற்கிறது. கணிதத்தில் க்ரொஸ் என்பது கூட்டல் அல்லது பெருக்கல். அல்ஜிப்ராவில் க்ரொஸ் என்பது வெறுமை. வாகன நெருக்கடியில் க்ரொஸ் என்றால் அம்பியூலன்ஸ். மின்கலத்திலும் இரத்த வகையிலும் க்ரொஸ் என்பது பொசிட்டிவ்.

அடையாளங்களில் க்ரொஸ் என்றால் தடைசெய்யப்பட்டது. ஏ, பி, சி, டி, ஈயில் க்ரொஸ் என்றால் எக்ஸ். சாலைகளில் க்ரொஸ் என்றால் சந்திப்பு. உரோமை எழுத்தில் க்ரொஸ் என்றால் பத்து. விடைத்தாளில் க்ரொஸ் என்றால் தவறு. ஏ.டி.எம். அட்டையைப் பதிவு செய்யும்போது க்ரொஸ் என்றால் இரகசியம். இப்படி திரும்பும் எல்லாப் பக்கங்களிலும் தெரியும் க்ரொஸ் நமக்குச் சொல்வது என்ன? சிலுவை என்றால் என்னைப் பொறுத்தவரையில் வாழ்வின் அடுத்த பக்கம். இளமையிலிருந்து பார்க்கும் அதன் அடுத்த பக்கம் முதுமை சிலுவை. நாம் ஒன்றை எடுக்கும்போதே அதன் அடுத்த பக்கமும் வருகிறதே... அந்த அடுத்த பக்கம்தான் சிலுவை. ஒன்றைத் தொடங்கும்போது அதன் முடிவும் நம் முன் வந்துவிடுகிறது. அந்த அடுத்த பக்கம்தான் சிலுவை.

இயேசுவை அரசராகவும் அவரின் முள்முடியை அரச கிரீடமாகவும் கையின் ஆணிகளை ஆயுதங்களாகவும் பார்க்க இவரால் மட்டுமே முடிந்தது. ஆக, சிலுவையின் மறுபக்கத்தையே பார்க்க வைத்தவர் இவரே. வாழ்வின் மறுபக்கம்தான் சிலுவை.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1869 – திமீத்ரி மெண்டெலீவ் தனது முதலாவது தனிம அட்டவணையை நிறைவேற்றி வெளியிட அனுப்பினார்.
- 1873 – முதலாவது பயன்படத் தகுந்த தட்டச்சுப்பொறியை ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.
- 1893 – நிக்கோலா தெஸ்லா வானொலி பற்றிய தனது முதலாவது பொதுமக்களுக்கான அறிமுகத்தை அமெரிக்காவின் சென்ட் லூயிஸ் நகரில் நடத்தினார்.
- 1896 – ஹென்றி பெக்கெரல் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார்.
- 1899 – இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்டவிதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்தது.
- 1901 – இலங்கையில் நான்காவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. மொத்த தொகையான 3,565,954இல் யாழ்ப்பாணத்தில் 33,879 பேர் பதிவாயினர்.
- 1953 – சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நான்கு நாட்களின் பின்னர் அவர் இறந்தார்.
- 1966 – சோவியத்தின் வெனேரா-3 விண்கலம் வெள்ளி கோளில் இறங்கியது. வேறொரு கோளில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1977 – சார்லி சாப்ளினின் உடல் சுவிட்சர்லாந்தில் அவரது கல்லறையில் இருந்து திருடப்பட்டது.
- 1980 – சனி கோளில் யானுசுஸ் என்ற சந்திரன் இருப்பதை வொயேஜர்-1 விண்கலம் உறுதி செய்தது.




# அமைச்சரவைத் தீர்மானங்கள்

### 01. பங்களாதேஷுடனான உத்தேச முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்

பிராந்திய ரீதியாக பிரதான வணிகத் தரப்பினர்களுடன் நிலவுகின்ற தொடர்புகளைப் பலப்படுத்துவதன் மூலம் சந்தைத் தடைகளை நீக்கி இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு சந்தை அணுகலுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல், உள்ளூர் விநியோகம் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக முதலீடுகளைக் கவர்ந்திழுத்தல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளை மேலும் அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இணையாக இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கும் இடையில் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2021.06.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷுடன் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் தற்போது காணப்படுகின்ற வர்த்தக ஒப்பந்தங்களை விஞ்சிய இருதரப்பு வர்த்தகங்களை அதிகரிக்க முடியுமென இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் நெறிப்படுத்தலில் பங்களாதேஷுடன் உத்தேச முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலை துரிதப்படுத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. இலங்கை சுங்கத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களுக்காக மேற்கொள்ளப்படும் சோதனைகள் மற்றும் விசாரணைகளைத் துரிதப்படுத்தல்

இலங்கை சுங்கத்தால் தடுத்துவைக்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற சோதனைகள், விசாரணைகள் மற்றும் ஏனைய ஏற்புடைய செயன்முறைகளைப் பூர்த்திசெய்வதற்காக நீண்டகாலம் எடுப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால் குறித்த பொருட்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுதல் மற்றும் அழிவடைதல் உள்ளிட்ட பல பொருளாதார நட்டங்கள் ஏற்படுவதால், அத்தகைய பொருட்கள் தொடர்பில் இலங்கை சுங்கத் திணைக்களத்தால் கடைப்பிடிக்கப்படும் தற்போது நிலவுகின்ற செயன்முறைகளைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, குறித்த விடயங்களை ஆராய்ந்து, தேவையாயின் சுங்கக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களை அடையாளம் கண்டு, அது தொடர்பாக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக கீழ்க்காணும் கட்டமைப்புடன் கூடிய அமைச்சரவைக் குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

நிமல் சிறிபால டி சில்வா,
துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்
(மருத்துவர்) ரமேஷ் பத்திரண,
பெருந்தோட்டத்துறை அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்
ரஞ்சித் சியம்பலாபிட்டிய,
நிதி இராஜாங்க அமைச்சர்
திலும் அமுனுகம,
முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்
ஷெஹான் சேமசிங்க,
நிதி இராஜாங்க அமைச்சர்

### 03. பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய தேசிய செயற்பாட்டுத் திட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையால் 2000ஆம் ஆண்டில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு எனும் பெயரிலான முன்மொழிவு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், உலகில் விருத்தியடைந்த மற்றும் விருத்தியடையாத நாடுகள் பல இப்பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்துத் தரப்பினர்களின் பங்களிப்புடனும், உடன்பாடுகளுடனும் வரைவாக்கப்பட்டுள்ள பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய தேசிய செயற்பாட்டுத் திட்டம் - 2023-2027இனை நடைமுறைப்படுத்துவதற்காக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் பற்றிய தேசிய கொள்கை

பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்காக தேசிய கொள்கை தயாரிப்புக்காக 2022.09.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அனைத்துத் தரப்பினர்களின் ஒத்துழைப்புடன் பிரதான தொனிப்பொருள் துறைகள் 08இன் கீழ் பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் பற்றிய தேசிய கொள்கை தயாரிப்பட்டுள்ளது.

குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. அவுஸ்திரேலியாவின் 'Sight for All' சமுதாயக் கருத்திட்ட நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

அவுஸ்திரேலியாவின் 'Sight for All' சமுதாயக் கருத்திட்ட நிறுவனத்தால் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவமனைகளில் கண் சிகிச்சை அலகுகளுக்கு மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை நன்கொடையாக வழங்குவதற்கும் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் திறன் விருத்திக்கு உதவி வழங்குவதற்கும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பதுளை மாகாண பொது மருத்துவமனை, இரத்தினபுரி, மட்டக்களப்பு மற்றும் களுபோவில போன்ற போதனா மருத்துவமனைகள் மற்றும் தங்காலை ஆதார மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சைக்குத் தேவையான நவீன வசதிகளைக் கருத்திற்கொண்டு, பிராந்திய கண் சிகிச்சை அலகுகளில் கண் சுகாதார ஊழியர்களின் திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கும் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் 99.42 மில்லியன் ரூபா கிடைக்கப் பெறவுள்ளது.

அதற்கமைய, உத்தேசிக்கப்பட்டுள்ள வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக அவுஸ்திரேலியாவின் 'Sight for All' சமுதாயக் கருத்திட்ட நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கும் இடையிலான உடன்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. அணுப் பொறுப்புகள் தொடர்பான பிரதான இரண்டு சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கையும் ஒரு தரப்பினராதல்

இலங்கையின் எதிர்கால வலுசக்தி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அணு வலுசக்தி மாற்று வழிமுறையாகக் கொள்வதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்திற்கு இணங்கியொழுகி அணுசக்தியைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்தல் பற்றி விடயங்களை ஆராய்வதற்காக நெறிப்படுத்தல் குழுவொன்றும் 09 செயற்பாட்டுக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

குறித்த செயற்பாட்டுக் குழுக்களால் தயாரிக்கப்பட்டுள்ள சுயமதிப்பீட்டு அறிக்கை பற்றி சர்வதேச அணு வலுசக்தி முகவராண்மை நிறுவனம் வழங்கியுள்ள பரிந்துரைகளுக்கமைய, அணுசக்தியில் மின்னுற்பத்தியை மேற்கொள்ளும் கருத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைக்கு இயலுமை உண்டு. அதற்கமைய, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் அணு பாதிப்புகளுக்கான குடியியல் பொறுப்புகள் பற்றிய வியானா சமவாயம் மற்றும் அணு பாதிப்புகளுக்கான குறைநிரப்பு இழப்பீட்டு சமவாயத்தின் தரப்பினர்களாவதற்கு பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த சமவாயங்களில் தரப்பினராவதற்கு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் மற்றும் மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. மின்னேற்றப்பட்ட மின்கலங்கள் மூலம் பஸ்களை இயக்குவதற்கான முன்னோடிக் கருத்திட்டம்

சர்வதேச வலுசக்தி நெருக்கடியின் மத்தியில் சுவட்டு எரிபொருள் இறக்குமதிக்கான செலவுகளைக் குறைப்பதற்கான ஒரு படிமுறையாக மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி ஆற்றல் வளங்களான சூரியசக்தியைப் பயன்படுத்தி பயணிக்கக்கூடிய பஸ்களை அறிமுகப்படுத்துவது மிகவும் பொருத்தமாக அமையுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கொழும்பு வர்த்தக நகரம் மற்றும் கம்பஹா மாவட்டத்தை மையமாகக்கொண்டு, மேல்மாகாணத்தை உள்ளடக்கிய வகையில், இலங்கை பயணிகள் போக்குவரத்துச் சபைக்கு மின்னேற்றப்பட்ட மின்கலத்தில் இயங்குகின்ற பஸ்களைப் பயன்படுத்துவதற்காக அரச – தனியார் பங்குடமைக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்திற்கொண்டு, முதன்மையாக முறையான சாத்தியவள கற்கையின் அடிப்படையில் முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. விமானங்களுக்காக பயன்படுத்தப்படும் ஜெட் ஏ-1 எரிபொருள் விநியோகத்திற்கான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தல்

விமானங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஜெட் ஏ-1 எரிபொருள் விநியோகம் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமகாலத்தில் நாடு எதிர்கொண்டுள்ள வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியால், ஜெட் ஏ-1 எரிபொருளை உற்பத்திசெய்கின்ற சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் தொழிற்பாடுகள் முடங்கியுள்ளமையாலும், ஜெட் ஏ-1 எரிபொருளை இறக்குமதி செய்தல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சவால்மிக்க பணியாக உள்ளமையாலும், பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து விமானங்களுக்குத் தேவையான ஜெட் ஏ-1 எரிபொருளை விநியோகிப்பதற்கான மாற்று நடவடிக்கைகள் பற்றிய கவனம் செலுத்த நேரிட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் உற்பத்திசெய்யப்படும் ஜெட் ஏ-1 எரிபொருளை விமானங்களுக்கு விநியோகிப்பதற்குத் தடைகள் ஏற்படாத வகையில், வேறு நாடுகளின் விமான சேவைகளுக்கு ஜெட் ஏ-1 எரிபொருளை விநியோகிக்கும் தரப்பினர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய ஜெட் ஏ-1 எரிபொருள் விநியோகிப்பதற்கு இயலுமை கொண்ட வேறு தரப்பினர்களுக்கான சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்காக மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. தேசிய பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தை தாபித்தல்

அரச ஊழியர்களின் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவர்கள் இளைப்பாறிய காலத்தில் அனுகூலங்களுடன் கூடிய ஓய்வூதியத்தை வழங்குவதற்கும், இளைப்பாறிய ஊழியர்கள் நாட்டுக்கு சுமையின்றி தமது ஓய்வு காலத்தைக் கழிப்பதற்கும் பொருத்தமான சூழலை உறுதிப்படுத்துவதற்கும் இயலுமாகும் வகையில் தேசிய பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் எனும் பெயரிலான நிதியத்தைத் தாபிப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச ஊழியர் ஒருவர் அரச சேவையில் இணைந்துகொண்ட பின்னர் அவருடைய அடிப்படைச் சம்பளத்தின் 8 வீதமும், தொழில் வழங்குநரின் பங்களிப்பாக 12 வீதமும் மாதாந்தம் உத்தேச நிதியத்திற்கு வைப்பிலிடுதல் வேண்டும்.

உத்தேச நிதியத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக முகாமைத்துவ சபையொன்றால் நிர்வகிக்கப்படும் சுயாதீன நிறுவனமொன்று தாபிக்கப்படுவதுடன், நிதியத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக விசேட தகைமைகளைக்கொண்ட நிதிய முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். உத்தேச பங்களிப்பு ஓய்வூதிய முறைமை எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அரச ஊழியர்களுக்கு ஏற்புடையதாக அமைவதுடன், 2016 ஜனவரி மாதத்தின் பின்னர் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகின்ற ஓய்வூதிய முறைக்கு இயங்கியொழுகுதல் வேண்டுமென்ற ஏற்பாடுகள், அவர்களின் ஆட்சேர்ப்பு நியமனக் கடிதங்களில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், தமது சுயவிருப்பின்பேரில் உத்தேச தேசிய பங்களிப்பு ஓய்வூதிய சம்பள முறையுடன் இணைந்து கொள்வதற்கு அவர்களுக்கும் இயலும். அதற்கமைய, தேவையான ஏற்பாடுகளை இயற்றுவதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவான ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

ரூபாவின் நாணயப் பெறுமதி வீழ்ச்சியின் விளைவு மற்றும் உலக சந்தையின் பெறுமதி/செலவு, காப்புறுதி மற்றும் கப்பல் போக்குவரத்துக் கட்டணம் பெறுமதி போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு இயைபுமுறைக் குறியீடு (HS Code) 677இன் கீழான தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது திட்டவட்டமான அலகொன்றுக்கான செஸ் வரி திருத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் 2022.11.14ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் 04 மாதங்களுள் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய, 2022.11.14ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. நெற் கொள்வனவு. அரிசி உற்பத்தி மற்றும் விற்பனையின் போதான சமூகப் பாதுகாப்பு வரி நீக்கம்

நெல் விவசாயிக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அரசாங்கத்தால் ஒருகிலோ நாடு நெல் 100 ரூபாவிற்கு கொள்வனவு செய்து குறைந்த வருமானங்கொண்ட குடும்பங்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒரு கிலோ நெல்லுக்கு விவசாயிக்கு செலுத்தப்படுகின்ற பணத்திற்கு மேலதிகமாக அரிசி உற்பத்தி செயன்முறையில் ஒரு கிலோ அரிசியை நுகர்வோருக்கு வழங்கும் வரைக்குமான நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம், களஞ்சிய வசதிகள், போக்குவரத்து போன்ற மேலதிக செலவுகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், அதற்கு மேலதிகமாக சமூகப் பாதுகாப்பு வரியாக ஒருகிலோ அரிசிக்கு 6.00 / 7.00 ரூபாவை செலுத்த வேண்டியிருக்கின்றமையை அரிசி உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த செலவைக் குறைத்துக்கொள்வதற்காக ஓரளவு சலுகையை வழங்க முடியுமாயின் விவசாயிகளுக்கு அதிக விலையை வழங்க முடியுமென மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, சந்தையில் தற்போது நிலவுகின்ற அரிசியின் விலையை அவ்வாறே பேணிக்கொண்டு, ஒருகிலோ நாடு நெல்லுக்கு 100 ரூபாவுக்கு அதிகமான விலையை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இயலுமாகும் வகையிலும் நெற் கொள்வனவு, அரிசி உற்பத்தி, மற்றும் விற்பனையின் போதான சமூகப் பாதுகாப்பு வரியை நீக்குவதற்காக 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு அறவீட்டு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 12. குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு பற்றிய புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தல்

தற்போது நடைமுறையிலுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்திற்குப் பதிலாக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறந்த தர நியமங்கள் மற்றும் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு இயலுமாகும் வகையில் மிகவும் பொருத்தமான ஏற்பாடுகளை உள்வாங்கி புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2021.03.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 13. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

தற்போது நடைமுறையிலுள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை மீள்கட்டமைப்பதற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 28.02.2023 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 0 23 | 138 6278 |
| கனேடியன் டொலர் | 150 2420 | 161 2831 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 382 | 42 5 53 |
| யூரோ | 265 2488 | 28 8275 |
| ஜப்பான் யென் | 1 5 38 | 1 6007 |
| சிங்கப்பூர் டொலர் | 152 2728 | 163 0076 |
| ஸ்ரேலிங் பவுன் | 317 76 4 | 333 2021 |
| சுவிஸ் பிராங்க் | 267 455 | 284 4877 |
| ஐ.அ.டொலர் | 246 5711 | 255 8101 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 0608 |
| குவைட் | குவைட் தினார் | 0,066 3824 |
| ஓமான் | ஓமான் றியால் | 828 1435 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 268 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 2482 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 3430 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.02.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5044 | ரூ. 41,183,847.00 | ஆங்கில எழுத்து Q; 9 4 4 9 3 7 |
| கொவிசெத | 3286 | ரூ. 82,433,551.60 | ஆங்கில எழுத்து Y; 08 16 54 70 |
| ஜாதிக சம்பத | 1499 | ரூ. 10,073,484.80 | வெற்றி இலக்கினம் கன்னி; 1 4 8 3 2 9 |
| தன நிதானய | 1074 | ரூ. 85,396,794.80 | ஆங்கில எழுத்து L; 36 51 59 60 |
| ராசி சுப பலன் (Handahana) | 353 | ரூ. 2,650,139.80 | வெற்றி இலக்கினம் மீனம்; 20 27 29 58; விசேட இலக்கினம் மீனம் |
| மெகா பவர் | 1392 | ரூ. 303,590,814.00 | ஆங்கில எழுத்து G; சுப்பர் இலக்கம் 20; 13 18 40 70 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் முன்வரவேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி.வேண்டுகோள்

(நுவரெலியா நிருபர்)

''அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க முன்வரவேண்டும்'' என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் அவர், ''போராட்டத்தில் உயிர் நீத்த போராளியின் உயிருக்கு பதில் கூற வேண்டியதும் அந்த பொறுப்பேற்க வேண்டியதும் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியுமே.

அன்று கட்சி ஆதரவாளர்களை வைத்து போராட்டக்காரர்களை தாக்கினார்கள். இன்று பொலிஸ்துறையை வைத்து தாக்குகின்றார்கள். இதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனநாயகமா?'' என கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் எதிர்ப்பு போராட்டத்தின்போது தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை (27) உயிரிழந்த போராட்டக்காரரின் குடும்பத்தாருக்கு மலையக மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று இந்த நாட்டில் நடைபெறுவது ஜனநாயகமா அல்லது அராஜக அரசியலா என்ற கேள்வி அனைவரிடமும் எழுந்துள்ளது. இந்நிலைமை தொடருமானால் சர்வதேச ரீதியில் எமக்கு உதவி செய்ய காத்திருக்கின்ற நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அந்த உதவிகளை செய்வதில் பின்வாங்கலாம். எனவே, அரசாங்கம் ஜனநாயக போராட்டங்களை பொலிஸ்துறையினரை கொண்டு அடக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.



ஜனாதிபதி இன்று பொறுப்பற்ற விதத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றார். தேர்தலை ஒரு விளையாட்டாக கருதுகின்றார். அது மக்களின் ஜனநாயக உரிமை என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் மிக விரைவில் நாம் மலையக மக்களை ஒன்று திரட்டி அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஜனநாயக போராட்டமொன்றை தலைநகரில் முன்னெடுப்போம். மக்களை தூண்டிவிட்டு அரசியல் செய்ய நினைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.ஜனநாயக நாடு ஒன்றில் தங்களுடைய கருத்துகளை சுதந்திரமாக தெரிவிப்பதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. இதனை யாராலும் தடுக்க முடியாது.

அன்று ஆதரவாளர்களை வைத்து போராட்டக்காரர்களை தாக்கியதால் கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியைவிட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதேபோல் இந்த அரசாங்கமும் செயற்படுவதற்கு முற்பட்டால் ஜனாதிபதி ரணிலுக்கும் அதே நிலைமை ஏற்படும்'' என்றார்.

# ஹப்புகஸ்தென்ன தோட்ட வைத்தியசாலையை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(பெல்மதுளை நிருபர்)

இரத்தினபுரி, ஹப்புகஸ்தென்ன அரச தோட்ட வைத்தியசாலையிலுள்ள வார்ட்டுகளை மீளத்திறந்து, அதன் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென அத்தோட்ட மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 100 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த இத்தோட்ட வைத்தியசாலையை கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் அரசாங்கம் பொறுப்பேற்று சப்ரகமுவ மாகாணசபையின் நிர்வாகத்திற்கு கீழ் கொண்டு வந்தது.

தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கிய இந்த தோட்ட வைத்தியசாலையிலுள்ள ஆண், பெண் மற்றும் மகப்பேறு உள்ளிட்ட மூன்று வார்ட்டுகளும் திறம்பட இயங்கின. இந்த மூன்று வார்ட்டுகளிலும் சுமார் 40 கட்டில்கள் காணப்படுகின்றன

தற்போது இந்த வார்ட்டுகள், சமையற்கூடங்கள் உள்ளிட்ட இதர கட்டடங்களும் கவனிப்பாரற்று காணப்படுகின்றன. இந்த கட்டில்கள் உட்பட தளபாடங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவித்த இரத்தினபுரி பிரதேச சபையின் உறுப்பினர் கோபால் தம்பிராஜ், இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் இரு வைத்தியர்களும் தேவையான தாதிகள், உதவியாளர்கள் எனப் பலரும் நியமிக்கப்பட்டு வெளிநோயாளர் பிரிவுகள் திறம்பட இயங்குகின்றன.

ஆனால், இங்குள்ள வார்ட்டுகள் இயங்குவதில்லை. அவை கைவிடப்பட்ட நிலையில் கவனிப்பாரற்று காணப்படுகின்றன. இதனால் கர்ப்பிணித் தாய்மார், தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய வயோதிபர்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அவசர நோயாளிகள் அனைவரும் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அவசர தேவை ஏற்படின் குறிப்பாக காப்பிணித் தாய்மார் இரத்தினபுரி பொது வைத்தியசாலை அல்லது கல்லேல்ல வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில், மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு செல்வதாயின் வாடகை வாகனங்களிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. அங்கிருந்து ஒரு முறை முச்சக்கரவண்டிக்கு சுமார் 5 ஆயிரம் ரூபா கோருகின்றனர். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் தோட்ட தொழிலாளர்கள் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆகவே, இந்த வைத்தியசாலையை புனரமைத்துத் தரவேண்டும் என இப்பகுதியில் வசிக்கும் தோட்ட மக்களின் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வைத்தியசாலையின் சுற்று வட்டாரத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது - என்று அவர் தெரிவித்தார்.

உலக செய்திகள்

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் கல்ஹின்ன மொடல் ஆரம்ப பாடசாலை மாணவி சாரா 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கல்ஹின்ன இர்சாட்-- நசீஹா ஆகியோரின் புதல்வியாவார்.



5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் கல்ஹின்ன மாவதுபொல முஸ்லிம்கள் மகாவித்தியாலய மாணவன் எப்.பர்ஹான் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் அக்குறணை பயிசல்-இஸ்பானா ஆகியோரது புதல்வராவார்.



# கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16ஆவது நிறைவாண்டு விழா



(இக்பால் அலி)

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16ஆவது நிறைவாண்டு விழா, தலைவர் ஆர்.அன்பழகன் தலைமையில் கண்டி ஏல்ஸ் ரீஜன்ஸ் நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஹட்டன் நெஷனல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கைலைவாசன் இந்திரவாசன், கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கண்டி இந்திய உதவித் தூதரக 2ஆம் செயலாளர் ஸ்ரீ பி.சோமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், கௌரவ விருந்தினர்களாக கொழும்பு லக்ஷ்மி இம்பெக்ஸ் உரிமையாளர் பி.மகேஸ்வரன் மற்றும் ஜீவமால் ஜயவர்தன ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சமூகதீபம் விருது - பி.பழனியப்பன், தொழில் முனைவர் விருது - எம்.ஸ்ரீகாந்தன், தொழில் முனைவர் விருது - தேசமான்ய ரவீ ரவீந்திரன், வாழ்நாள் சாதனையாளர் விருது ஏ.தட்சணாமூர்த்தி ஆகியோருக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் செயலாளர் எஸ்.பரமேஸ்வரன், பொருளாளர் மற்றும் சிங்கள, முஸ்லிம், தமிழ் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நியாயமான கோரிக்கைகளுக்காக இடம்பெற்றுவரும்

# மக்கள் போராட்டங்களை ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் அடக்கி - ஒடுக்கி வருவதை அனுமதிக்க முடியாது

## ஐ.மா.லெ.கட்சியின் பொதுச்செயலாளர் வன்மையாகக் கண்டிப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சதித்திட்டத்தின் மூலம் இல்லாமல்செய்வதற்காக ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் செய்துவரும் சூழ்ச்சியைக் கண்டித்து 26ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியினர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த அமைதியான எதிர்ப்புப் போராட்டத்தின் மீது அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் பொலிஸ் படைகள் அடக்கி, ஒடுக்கி தாக்குதல் நடத்தியமையையும் அதனால் ஒருவர் உயிரிழந்தமையையும் புதிய ஜனநாயக மார்க்ஸிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் மிகவும் வன்மையாகக் கண்டித் துள்ளார்.

மிகவும் நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டங்களை ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் அடக்கி, ஒடுக்கி வருவதை இனிமேலும் அனும திக்க முடியாது.

ஆளும் வர்க்கத்துக்கு சார்பாக அவர்களாலேயே இயற்றப்பட்ட அரசியலமைப்பில் குறிப்பிடப்பட் டுள்ள குறைந்தபட்ச உரிமைகளை மதிக்காத போக்கு இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போராட்டத்தில் பங்குபற்றிய தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எமது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட்டு வலுவான போராட்டங்களை முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த, தொழிற்சங்க, இடதுசாரி சக்திகள் மற்றும் உழைக்கும் மக்கள் முன்னெடுப் பதைத் தவிர மாற்றுவழி கிடையாது எனவும் சி.கா.செந்திவேல் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானிய தூதரக அதிகாரி - யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்திப்பு





(யாழ். நிருபர்)

ஜப்பானிய தூதரக அரசியல் பிரிவு அதிகாரியொருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கலைப்பீட மாணவர் ஒன்றிய அறையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது ஜப்பானிய தூதரக அரசியல் பிரிவு அதிகாரி ஹனா, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சில்வெஸ்டார் ஜெல்சின், உப தலைவர் இரா.தர்ஷன், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நோக்கம் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் வடக்கு, கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு தழுவிய திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், மகாவலி அபிவிருத்தித் திட்டமும் திட்டமிட்ட சிங்கள மயமாக்கமும், மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினை, தமிழ் மாணவர் சமூகத்தின் மீதான அரச அடக்குமுறைகள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியவர் கைது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டு கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நோயாளர் பார்வை நேரம் முடிந்த பின் தந்தையைப் பார்வையிட அனுமதிக்கவில்லை என்ற காரணத்துக்காகவே இந்த வன்முறை இடம்பெற்றதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிணவறை பக்கம் உள்ள நுழைவாயிலுக்கு அருகில் பட்டா வாகனத்தில் வந்த சிலர் கதவால் ஏறிக் குதித்து வைத்தியசாலைக்குள் நுழைய முயற்சித்துள்ளனர்.

இதனை அவதானித்த வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை தடுக்க முயன்றபோது வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர்.

அவர்கள் வந்த பட்டா ரக வாகனத்திலிருந்து வாளை எடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது வெட்ட முயற்சித்ததுள்ளனர். இதனையடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை தடுக்க முயன்றுள்ளார்.


அங்கிருந்த கதிரை, மேசை போன்றவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்திய வன்முறைக் கும்பல் பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

துரித விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் ஒருவரை கைதுசெய்தனர்.

ஏழாலையைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டார். ஏனையோரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தோற்கடிப்பு



யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஆறு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (27) மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட்டால் இரண்டாவது தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு - செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் பதிவா கின.

45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ். மாநகர சபையில் ஒருவர் உயிரிழந்த நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் 9 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் சார்பில் 2 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கரவெட்டி கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி, கப்பூது பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற தோட்டக் கிணற்றில் வீழ்ந்து வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் (27) திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையாபிள்ளை (வயது 65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் பாதுகாப்பற்ற வயல் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அப்பகுதியில் நில மட்டத்துடன் பாதுகாப்பற்ற கிணறுகள் காணப்படுவதாகவும், அவற்றை காணி உரிமையாளர்கள் பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

# கடந்த ஆண்டில் நாட்டில் 5 இலட்சம் பேர் தொழில் இழப்பு

2022ஆம் ஆண்டில் நாட்டில் குறைந்தது 5 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் தொழில் மற்றும் சேவைத் துறைகளில் பணிபுரிபவர்கள் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்ட உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்தின் உப தலைவர் மார்ட்டின் ரைசர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையின்படி, 2021 மற்றும் 2022இற்கு இடையில் இலங்கையில் வறுமை தோராயமாக 13 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்




பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில் நகர்ப்புற வறுமையும் 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக மும்மடங்காக அதிகரித்துள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே ஏழைகள் என வகைப்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைச் செலவு 65 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ஏழைகள் அல்லாதவர்களுக்கு 57 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தில் இருப்பதாகவும், பல ஆண்டுகளாக பொருளாதாரத்தின் தவறான நிர்வாகம், மோசமான நிர்வாகம், மோசமான கொள்கைத் தெரிவுகள், கொவிட் தொற்றுநோய் மற்றும் ரஷ்ய - உக்ரேனிய மோதல்கள் போன்ற வெளிப்புற தாக்கம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமென உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

# சுங்கத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்கள் குறித்த விசாரணை மேற்கொள்ள ஐவர் கொண்ட குழு

இலங்கை சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த ஐந்து பேர் கொண்ட அமைச்சர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுங்கத்துறையின் நீண்டகால விசாரணை நடைமுறைகள் காரணமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் சேதமடைந்து அல்லது அழிந்து, இறுதியில் நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாக பாதிக்கும் என்ற உண்மையைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்பேரில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் இந்தக் குழுவானது தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து, சுங்க கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை இனங்கண்டு, பின்னர் அத்தகைய பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க




வேண்டும்.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க ஆகியோர் அடங்கிய ஐவர் குழு இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளது.

# புதிதாக 2500 வைத்தியர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

புதிதாக 2500 வைத்தியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக நிதி அமைச்சின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் வைத்தியர்களுக்கான வெற்றிடம் நீங்கும் என சுகாதார அமைச்சின் செயலாளர் கூறினார்.

சில துறைகளில் விசேட வைத்தியர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியர்கள் சிலர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதுடன், சிலர் விடுமுறையில் சென்றுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச செலவில் வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காகச் சென்று மீண்டும் நாடு திரும்பாதவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் இதன்போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தம்பபவனி காற்றாலை மின் நிலையத்தில் செப்புக்கம்பிகள் திருட்டு

தலைமன்னார் தம்பபவனி காற்றாலை மின் நிலைய களஞ்சியசாலையில் 19 இலட்ச ரூபாவுக்கும் அதிக பெறுமதியான செப்புக்கம்பி திருடப்பட்டமை தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



கடந்த 25ஆம் திகதி இரவு சில இனந்தெரியாத கும்பல் இந்தத் திருட்டைச் செய்துள்ளது. இது தொடர்பாக நேற்று முன்தினம் (27) மின் நிலைய அத்தியட்சகர் தலைமன்னார் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹைலெவல் வீதியூடாக செல்லும் பயணிகள் பஸ் சாரதிகளுக்கு விசேட அறிவித்தல்

ஹைலெவல் வீதியில் இயங்கும் அனைத்து பயணிகள் போக்குவரத்து பஸ்களும் இன்றுமுதல் (மார்ச் 01) மாகும்புர பல்நோக்கு பஸ் தரிப்பு நிலையத்தின் (எம்எம்சி) வழியாக பயணிக்க வேண்டுமென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த தீர்மானத்திற்கு மாறாக செயற்படும் பஸ்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் உறுதியளித்துள்ளார்.

ஹைலெவல் வீதியூடாக மாகும்புரவில் உள்ள பல்நோக்கு பஸ் தரிப்பு நிலையத்தின் முன்பாக பஸ்களை நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்கி செல்வதால் வீதி விபத்துகள் அதிகரித்து பயணிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, மாகும்புர பல்நோக்கு பஸ் தரிப்பு நிலையத்தின் முன்பாக உள்ள ஹைலெவல் சாலையில் பயணிகள் பஸ்ஸை நிறுத்துவதற்கும், பயணிகளை ஏற்றி,



இறக்குவதற்கும் தடைசெய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விதி அனைத்து பஸ்களுக்கும் பொருந்தும். இருப்பினும், இது குறித்து முறைப்பாடுகள் வந்தால் விசாரணையைத் தொடர்ந்து பஸ்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

# யாழில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் வழக்கை மே மாதம் 8ஆம் திகதிக்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

ஜனவரி 15ஆம் திகதி தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகளின் வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் நேற்று (28) செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க செயலாளர், பல்கலைக்கழக மாணவர் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

மேலும் சில சந்தேக நபர்களை வழக்கில் இணைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனை அடுத்து, வழக்கை மே மாதம் 8ஆம் திகதிக்கு மன்று ஒத்திவைத்தது.

# அன்ரன் பிலிப் சின்னராசா கனடாவில் காலமானார்



1983 இனவன்செயலின்போது வெலிக்கடைச் சிறையில் தப்பிய கைதிகளில் ஒருவரான அன்ரன் பிலிப் சின்னராசா நேற்று முன்தினம் (27) கனடாவில் காலமானார். இவர் இலங்கையில் கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.

நீர்வேலி வங்கிக் கொள்ளையின் பணத்தை வங்கியில் இட்டிருந்தமை தொடர்பாக இவர் அப்போது கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அப்போது அருட்தந்தையாக யாழ். சென் ஜேம்ஸ் தேவாலயத்தில் கடமைபுரிந்திருந்தார்.

மட்டக்களப்பு சிறை உடைப்பின்போது இயக்கங்களால் கடத்தப்பட்டு இந்தியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

திருமணப் பந்தத்தில் இணைந்த இவர் கனடாவில் வாழ்ந்து வந்தார்.

அமரர் பிலிப் சின்னராசா தமிழர் உரிமைக்காக நீண்டகாலம் செயற்பட்ட ஒருவர். தன்னலமற்ற சேவை மற்றும் எண்ணற்ற தன்னார்வப் பணிகளுக்காகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் மிகவும் மதிக்கப்படுபவர்.

ரொறொன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகத்தோடு நீண்டகாலமாக இணைந்து இயங்கிவந்தவர்.

# அரசியல்வாதிகளின் தவறால் அரச நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

சில அரசியல்வாதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் தவறுகளால் அரச நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை உடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மனித வள முகாமைத்துவப் பிரிவுக்கு இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் ISO 9001: 2015 தரச் சான்றிதழை வழங்குவதை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

அரச நிறுவனங்களை மக்களின் நட்புறவாக மாற்றுவதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவும் அவசியமானது என சுட்டிக்காட்டிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தரமான விருதுகளை வென்றதன் பின்னர் உரிய தரத்தைப் பேணுவதற்கு நிறுவனத்திலுள்ள அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். விருதுகளை வெல்வதுடன்,



விருதுகளை வெல்வதற்கான சூழ்நிலையை பாதுகாப்பதும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரின் பொறுப்பாகும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், அது இலகுவான காரியம் அல்ல என்றும் கூறினார்.

ISO 9001 : 2015 தரச் சான்றிதழைப் பெறுவதற்காக, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மனிதவளப் பிரிவு இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன், அது தொடர்பான கணக்காய்வு கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடத்தப்பட்டது. அதன்படி, அதற்கான தரச் சான்றிதழ் வழங்கப்பட்டு, ஜனவரி 23ஆம் திகதிமுதல் அமுலுக்கு வருகிறது. இந்த நியமத்தை முழு நிறுவனத்திற்கும் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும், பிரதான அலுவலகத்திற்கு வெளியே உள்ள அலுவலகங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சமந்தி நாரங்கொட, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) டபிள்யூ.ஏ.எஸ்.சுமனசூரிய, பணிப்பாளர் (நிர்வாகம்) தேவிகா கெகுலந்தர, பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஸ்ரீராணி ரோஸ் மார்டிங் மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# கடந்த இரண்டு மாதங்களில் 11 ஆயிரம் பேருக்கு டெங்கு



புத்தளம், கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இந்நாட்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் தெஹிவளை, பிலியந்தலை, இரத்மலானை, கொத்தட்டுவ, மஹரகம போன்ற பிரதேசங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக வைத்திய நிபுணர், வைத்தியர் இந்திக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 11 ஆயிரத்து 184 பேர் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலி

பாணந்துறை, பின்வத்தை பொது மயானத்திற்கு அருகில் நேற்று (28) காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கடவத்தையைச் சேர்ந்த 56 வயதுடைய வர்த்தகரான சம்பத் குடகொட என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தகர் தனது சொகுசு காரில் காலி வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது





மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வர்த்தகர் கடவத்தை நகரிலுள்ள வெளிநாட்டு மதுபானக் கடை ஒன்றின் உரிமையாளர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் பாணந்துறை, பின்வத்தையில் வீடொன்றை நிர்மாணித்து வருவதாகவும், நிர்மாணப் பணிகளுக்குச் செல்லும்போது அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை அடையாளம் காண, பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பாணந்துறையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர், நேற்று (28) காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை குலீகொட பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

42 வயதான அவர் மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது, இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

# மனிதநேய ஊடகர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

*(யாழ்.நிருபர்)*

வடக்கு மாகாணத்தில் பல சவால்களின் மத்தியிலும், அச்சுறுத்தல்களையும் தாண்டி மக்களின் உரிமைக்காக பணியாற்றிவருகின்ற மனிதநேய ஊடகவியலாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று (28) யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மனிதநேயத்தோடும், அர்ப் பணிப்போடும் தமது கடமைகளை வகைப்பொறுப்போடு முன்னெடுத்துவரும் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு மாகாண ஊடகவியலாளர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.



வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் ஊடகவியலாளர் பாலநாதன் சதீசன், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன், கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடகவியலாளர் கதிரவேலு இரவீந்திரராசா, மன்னார் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களான றொசேரியன் லெம்பேட் மற்றும் யூட் பெலிஸ்ரஸ் பச்சேக், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களான தம்பித்துரை பிரதீபன், முருகப்பெருமான் மதிவாணன், தங்கவேல் சுமன், நடராசா குகராஜ், விஜயகுமார் லோஜன், இளையகுட்டி சாரங்கன், கந்தசாமி பரதன், சுமித்தி தங்கராசா, தங்கராசா காண்டீபன் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஜமாலியா வித்தியாலய அதிபரின் இடமாற்றத்தை எதிர்த்து பெற்றோரால் போராட்டம் முன்னெடுப்பு





(சம்மாந்துறை, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

கமு/சது/ஜமாலியா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம்.மஹிஷா பானு இடமாற்றம் செய்யப்பட்டதாக பரவிய செய்தியை அடுத்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலை முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை (28) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

பல்வேறு அநாகரிக விடயங்கள் இடம்பெற்று வந்த இப்பாடசாலையை பொறுப்பேற்று திறன்பட நிர்வகித்து வந்த அதிபரை கடமையை செய்யவிடாமல் ஒரு கும்பல் தடுத்து வருவதாகவும், தொடர்ந்தும் இடையூறுகளை செய்து வருவதாகவும் தெரிவித்த பெற்றோர், கொட்டும் மழையில் நனைந்தபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், சம்மாந்துறை பொலிஸார் ஆகியோர் அங்கு கூடியிருந்த பெற்றோர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக கடந்த காலங்களில் இருந்த சிலர் தொடர்ந்தும் பாடசாலையை கொண்டுசெல்ல முடியாதவகையில் இடைஞ்சல் செய்வதாகவும் அவர்களின் 09 பிள்ளைகளுக்காக எங்களின் 165இற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்த பெற்றோர்கள், எவ்வித விட்டுக்கொடுப்புகளுமின்றி போராட்டம் நடத்தினர்.

மேலும், பாடசாலை அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டால் நாங்கள் எங்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமாட்டோம் என்றும் வாதிட்டனர். தொடர்ச்சியாக கல்வி அதிகாரிகள் மற்றும் பொலிஸார், பெற்றோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை காரணமாக தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிட்டு பெற்றோர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

பாடசாலை அபிவிருத்திக் குழு முன்னாள் உறுப்பினர்களின் தொல்லையான நடவடிக்கை காரணமாக பாடசாலை அதிபர் தனது சொந்த விருப்பில் இடமாற்றம் கோரியிருந்தும் மாகாண கல்வி உயரதிகாரிகள் அவ்விடமாற்றத்தை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆளுநர் கைத்தறி ஆடை உற்பத்தி நிலையத்துக்கு விஜயம்




(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் மருதமுனையில் உள்ள கைத்தறி ஆடை உற்பத்தி நிலையத்துக்கு திங்கட்கிழமை (27) விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதில் கைத்தறி ஆடை உற்பத்தி மூலமான உற்பத்திகளை பார்வையிட்டதுடன், இதற்கான சிறந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையை ஏற்படுத்தித் தருவதாகவும் உற்பத்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கைத்தறி உற்பத்தி மூலம் மருதமுனை பிரதேசம் பல இலாபங்களை அடைந்து வருகின்றது. இதனை மேம்படுத்துவதற்கான உத்திகளை தங்களுக்கு வழங்குமாறும் கைத்தறி உற்பத்தியாளர்கள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

# விருந்தோம்பல்துறை பயிற்சிப் பட்டறையை பூர்த்திசெய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்




(மட்டக்களப்பு)

தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நடத்திய 20 நாள் பயிற்சிப் பட்டறையை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது. தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இப்பயிற்சிப் பட்டறை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் திட்ட இணைப்பாளர் ஸ்ரீயானி ஏக்கநாயக்க, தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பணிப்பாளர் பி.ஆர்.ரொட்ரிக்கோ, ரொட்ரி கழகத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீபன் புஷ்பராஜா, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதி செயலாளர் நாயகம் எம்.விஜேசூரிய என பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விருந்தோம்பல் துறை சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் கே.எஸ்.தாசன் வளவாளராக செயற்பட்டதோடு, இப்பயிற்சிப் பாசறையில் 40 இளைஞர், யுவதிகள் வரை பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முதியோர்களுக்கான கண் சிகிச்சை மற்றும் தொற்றா நோய்களுக்கான பரிசோதனை, மருத்துவ முகாம் மற்றும் நிவாரண உதவி வழங்கல் நிகழ்வு பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரத்தின் வழிகாட்டலில் மூன்று கட்டங்களாக அண்மையில் இடம்பெற்றது. இம்முகாம்கள் ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்தின் சமூக சேவை பிரிவின் ஏற்பாட்டில் மூன்று கட்டங்களாக இடம்பெற்றன. இதன்போது பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் பி.டி.மலேஸ்வரன், கண் சிகிச்சை மற்றும் தொற்றா நோய் வைத்தியர்கள், ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (மட்டக்களப்பு)

# மழையினால் அறுவடைக்கு தாமதம்; விவசாயிகள் கவலை

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் திங்கட்கிழமை மாலை தொடக்கம் பெய்த பெருமழையால் மீண்டும் அறுவடை தாமதமடைந்துள்ளதோடு விவசாயிகள் கவலையும் கொண்டுள்ளனர்.

இதேவேளை, அரசினால் முன்னெடுக்கப்பட்ட அரிசி ஆலை மூலமான நெற்கொள்வனவும் பாதிப்புறும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது. விவசாயக் கண்டங்களில் இறுதிக்கட்ட அறுவடை நடந்த நிலையிலே விவசாயிகளுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

அறுவடை குறைந்த நிலையில் விற்கும் விலையும் காணாத நிலையில் பெரும்போக விவசாயத்தில் இம்முறை விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். காலநிலை மப்பும் மந்தாரமுமாகக் காணப்படுவதோடு தொடர்ந்தும் மழை பெய்யும் அபாயமே தோன்றியுள்ளது.

இம்முறை குத்தகைக்கு வயலைப்பெற்று சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட விவசாயிகள் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை. நாட்டின் அரிசித் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை அம்பாறை மாவட்ட விவசாயிகளே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பதவி உயர்வு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

காத்தான்குடியைச் சேர்ந்த எம்.ஐ.எம்.மாஹீர் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி உத்தியோகத்தராக இணைந்து மதிப்பீட்டாளராக கடமையாற்றி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய நிலையில், ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கான இந்த நியமனம் கிழக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்பட்டுள்ளது. காத்தான்குடி ஹிழுறியா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற மாஹீர், உயர் கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியில் கற்றதுடன், பல்கலைக்கழக கல்வியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

மில்லத் மகளிர் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் மேலதிக உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியுள்ளதுடன், பல சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளார்.

# 'ஆயத்' கவிதை நூல் வெளியீட்டு விழா




(மருதமுனை செய்தியாளர்)

மருதமுனை புதுப் புனைவு பதிப்பகத்தின் ஏற்பாட்டில் கவிஞர் மருதமுனை ஜமீல் எழுதிய 'ஆயத்' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதமுனை மருதூர்க்கனி நூலக கேட்போர் கூடத்தில் மர்ஹூம் மருதூர் பாரி நினைவரங்கில் நடைபெறவுள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முன்னிலை அதிதியாக எழுத்தாளர் எம்.எம்.நௌஸாத் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

ஓய்வு நிலை ஆசிரியர் அபூபக்கர் நஜீம், எழுத்தாளர் ஜமால்தீன் நௌபாஸ் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெறவுள்ளனர். நூல் அறிமுகம் கவிஞர் ஏ.எம்.குர்ஷித், நூல் மீதான வியாக்கியானம் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், கவிஞர் சிறாஜ் மஷ்ஹூர், கவிஞர் லலித கோபன், கவிஞர் சித்தி றபீக்கா, வாசகன் தபீப் இஸ்மா, நிகழ்ச்சித் தொகுப்பாளர் கவிஞர் எம்.எம்.விஜிலி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# காத்தான்குடி சமூகத்தின் ஏற்பாட்டில் கட்டாரில் வருடாந்த ஒன்றுகூடல்



(காத்தான்குடி செய்தியாளர்)

கட்டார் வாழ் காத்தான்குடி சமூகத்தின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டுக்கான 5ஆவது ஒன்றுகூடல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(24) கட்டாரிலுள்ள Umm Ebairiya என்ற இடத்தில் இடம்பெற்றது. கட்டாரில் பணிபுரிகின்ற காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த உறவுகள் அனைவரும் கலந்துகொள்ளும் ஒன்றுகூடல் நிகழ்வு வருடத்திற்கொருமுறை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை இடம்பெற்ற KCQவின் 5ஆவது ஒன்றுகூடல் நிகழ்விற்கு காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த அதிகளவானவர்கள் தனியாகவும் குடும்பங்களாகவும் கலந்து சிறப்பித்தனர். பகற்போசனத்தோடு ஆரம்பித்த நிகழ்வுகளில், KCQ பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், பெரியவர்கள் மற்றும் சிறியவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளுடன் சிறப்பாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் RISE - Sri Lanka நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.அக்ரம் நளீமி காணொளி மூலமான விசேட உரையொன்றும் இடம்பெற்றது. அத்தோடு காத்தான்குடி பிரதேசத்திலிருந்து கட்டார் நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக புதிதாக வருகை தந்துள்ள சகோதரர்களுக்குரிய வழிகாட்டல் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அக்கரைப்பற்று பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலை பார்வையிட்ட இறக்குவானை சர்வமதக் குழுவினர்

(மாளிகைக்காடு செய்தியாளர்)



அக்கரைப்பற்று ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினை பார்வையிட அகில இலங்கை சமாதானப் பேரவை இறக்குவானை கிளையினர் பொல்கஹவெல பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் விஜயம் மேற்கொண்டனர். இந்தக் குழுவில் பௌத்த விகாராதிபதிகள், இந்து மதகுருமார்கள், கிறிஸ்தவ பாதிரியார்கள், உலமாக்கள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள சமாதானப் பேரவை கிளைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த குறித்த குழுவினர், அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலை பார்வையிட்டனர்.

அதற்கிணங்க, அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற மார்க்க பிரசங்கத்தை செவியேற்றதுடன், பள்ளிவாசலையும் பார்வையிட்டனர். இவ்விஜயத்தின்போது கருத்து வெளியிட்ட பொல்கஹவெல பிரதேச செயலாளர், இப்பள்ளிவாசலானது மனதிற்கு அமைதி தருவதாக காணப்படுகிறது எனவும் கலை உணர்வுகளுடனான ரம்மியமான சூழல் பள்ளியில் உள்ளதாகவும் தாங்கள் நினைத்து வந்ததற்கு மாற்றமாக இப்பள்ளிவாசலில் தங்களுக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், சிறப்பான ஒழுங்குகளை செய்து தந்த குறித்த பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் உட்பட நிர்வாகத்தினருக்கு தமது நன்றிகளையும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பிலான வைத்தியப் பரிசோதனை





(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு, கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக பரிசீலனை செய்யும் பொருட்டு, வைத்தியப் பரிசோதனை நேற்று செவ்வாய்க்கிழமை (28) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லடி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சோதிராஜா அமிர்தாப் தலைமையில் நடைபெற்ற இவ் வைத்தியப் பரிசோதனையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை எலும்பு முறிவுச் சிகிச்சை நிபுணர் கே.மாதவன் மற்றும் பாடசாலைகளுக்கான பற்சிகிச்சை வைத்தியர் எம்.எம்.ஐ. அகிலா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களின் கண்குறைபாடு, பற்சுகாதாரம், உடல் உளச்சுத்தம் மற்றும் நிறை, உயரம் போன்றவற்றைப் பரிசோதித்தனர். இதன்போது தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக பரிசோதனை செய்யப்பட்டது.




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று செவ்வாய்க்கிழமை (28) திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய நேரடி கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதன்போது, சல்லி முத்துமாரியம்மன் கோயிலுக்குச் சென்று விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (அப்துல்சலாம் யாசீம்)

# விவசாயிகளின் உயிருக்கு யானைகளினால் அச்சுறுத்தல்

## அனைத்து விவசாய அமைப்பின் தலைவர் நௌஷாட்

(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்)



உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த முயலும் அரசு, உற்பத்தியையும் விவசாயிகளையும் யானைகளிடமிருந்து பாதுகாக்கத் தவறுகின்றது - என சம்மாந்துறை அனைத்து விவசாய அமைப்பின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 24 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளதுடன், ஏறத்தாழ நான்கு வருடங்களாக அனைத்து விவசாய அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து விவசாயிகளிடமிருந்து 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணம் அறவிட்டு யானைகளிடமிருந்து உற்பத்தியைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவந்திருக்கின்றன. இருந்தும் அரசாங்கத்திடமிருந்து இந்த முயற்சிக்கு ஆயுதம் தாங்கிய சிவில் பாதுகாப்புப் படையினரை தந்துதவுமாறு வேண்டுகோள் விடுத்தும் அது கைகூடவில்லை.

இதனால் ஒவ்வொரு போகமும் அப்பாவி விவசாயிகள் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த வாரம் விவசாயி ஒருவரின் உயிரிழப்பின்போது வனஜீவராசிகள், பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையில் இறங்கியும் யானைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனது.

தற்போது அறுவடை இறுதிக்கட்டத்தில் இருக்கும்போது நாளாந்தம் நூற்றுக்கணக்கான யானைகள் சம்மாந்துறை விவசாயிகளின் உற்பத்திக்கும், உயிருக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. இதற்குத் தீர்வு காணும்படி ஜனாதிபதிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திருடப்பட்ட 8 பவுண் தாலிக்கொடி உருக்கிய நிலையில் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

பிள்ளைக்கு பாலூட்டுவதாக தெரிவித்து வீட்டினுள் சென்று சூட்சுமமாக தாலிக்கொடியை களவாடிச்சென்ற சந்தேக நபரான பெண்ணை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்லப்பர் வீதியிலுள்ள வீடொன்றினுள் இருந்த 8 பவுண் பெறுமதியுடைய தாலிக்கொடி காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை (25) முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய, சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலாலின் வழிநடத்தலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டேவிட் டினேஸ் தலைமையிலான குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்திருந்தனர்.

இதன்போது, குறித்த வீட்டில் கடந்த வியாழக்கிழமை (16) அன்று சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், எனினும் தாலிக்கொடி காணாமல்போயிருந்ததை பின்னர் அறிந்து உடனடியாக முறைப்பாட்டை பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து, குறித்த வீட்டுக்கு வந்து செல்கின்ற நபர்கள் தொடர்பில் ஆராய்ந்த பொலிஸ் குழு இத்திருட்டுச் சம்பவத்தில் ஒரு குடும்பமே பின்னணியில் செயற்பட்டுள்ளதை அறிந்தது. இதன்பிரகாரம் பொலிஸ் விசேடப் பிரிவின் தகவலுக்கமைய முதலில் குறித்த குடும்பத்தின் உறவுமுறையிலான 40 வயதுடைய பெண் சந்தேக நபரை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்தனர்.

வழமைபோன்று அடிக்கடி குறித்த வீட்டிற்கு வருகின்ற சந்தேக நபர் சம்பவ தினமன்று தனது கைக்குழந்தைக்கு பாலூட்டுவதற்கு வெளிநபர்கள் இருப்பதனால் சங்கடமாக இருப்பதாக வீட்டு உரிமையாளரான தனது உறவினர்களிடம் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய வீட்டு உரிமையாளர் குழந்தையை வீட்டினுள் எடுத்துச்சென்று பாலூட்டுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், வீட்டினுள் சென்ற பெண் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 8 பவுண் தாலிக்கொடியினை எடுத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டார். பின்னர் வீட்டு உரிமையாளர் தனது வீட்டினுள் பாதுகாப்பாக இருந்த தாலிக்கொடி காணாமல்போயிருந்ததை அறிந்து பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இதற்கமைய செயற்பட்ட பொலிஸ் குழு சந்தேக நபரான 40 வயதுடைய பெண்ணை கைதுசெய்து விசாரணை மேற்கொண்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) அன்று கல்முனை நீதவான் நீதிமன்று முன்னிலையில் ஆஜர்படுத்தியதை அடுத்து, 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சந்தேக நபருக்கு ஒத்தாசையாக செயற்பட்ட தாய், தம்பி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தந்தை தொடர்ந்தும் தலைமறைவாகி இருந்து வருகின்றார். இத்திருட்டு சம்பவம் போன்றவற்றில் கிடைக்கின்ற தங்க ஆபரணங்களை தம்பி தனது தனிப்பட்ட தேவைக்காக விற்பனைசெய்து வருவது பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், குறித்த திருட்டை 40 வயதுடைய சந்தேக நபரான பெண் ஏற்கனவே தனது சொந்த தேவைக்காக தன்னால் அடகு வைக்கப்பட்ட நகையை மீட்டுக் கொள்வதற்கு இவ்வாறு களவாடியதாக தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. நகை திருட்டில் ஈடுபட்ட குறித்த சந்தேக நபரான பெண்ணிடம் நகைகளைப் பெற்று விற்பனைசெய்த சந்தேக நபரும் கைதாகியுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக தொடர் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். திருடப்பட்ட தாலிக்கொடி உருக்கிய நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# காணாமல்போன 13 வயதுச் சிறுவன் மீட்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, சவளக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள சொறிக்கல் முனை பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் ஞாயிற்றுக்கிழமை காணாமல்போயிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (28) அவரது தாயிடமிருந்து மீட்டுள்ளதாக சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனின் தாயாரும் தந்தையாரும் விவாகரத்து பெற்று பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில், தந்தையுடன் இருந்த சிறுவனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரமுனையில் மரணவீட்டிற்கு அழைத்துச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

குறித்த சிறுவன் மரணவீட்டிலிருந்து தந்தையாருக்கு தெரியாமல் அவனது நண்பனின் உதவியுடன் வவுணதீவு கொத்தியாவலை பிரதேசத்திலுள்ள தாயாரை தேடிச்சென்று அங்கு இருந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து சிறுவனை நேற்று செவ்வாய்க்கிழமை மீட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மீரா நகரில் 5 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)



அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீரா நகர் வீதியில் வைத்து 5 கிலோவிற்கும் அதிகமான கஞ்சாவை சூட்சுமமாக கடத்திச் சென்ற 51 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (27) இரவு 11 மணியளவில் அக்கரைப்பற்று இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கமைய மல்வத்தை விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் குறித்த சந்தேக நபர் கைதானார். மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் 'ஸஹிரியன் 90' பழைய மாணவர்களின் அனுசரணையில் கல்லூரி உயர்தர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தற்போது அரச நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்கு மத்தியில் பெறுமதிவாய்ந்த போட்டோ பிரதி எடுக்கும் காகிதாதிகள் மற்றும் உயர்தர விஞ்ஞான வகுப்பிற்குரிய பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் கையேடுகள் போன்றவை கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபிரிடம் கையளிக்கப்பட்டன. (நிந்தவூர் செய்தியாளர்)

# பாரம்பரியமாக ஓதப்பட்டு வந்த புனித புஹாரி செரீப் பாராயணம் தமாம் செய்து வைப்பு

(வொலிவேரியன் செய்தியாளர்)



சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக ஓதப்பட்டு வந்த புனிதபுஹாரி செரீப் பாராயணம் இம்முறையும் ஓதப்பட்டு இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம் பாவா (ரஷாதி)யினால் வெள்ளிக்கிழமை(24) தமாம் செய்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீமின் நெறிப்படுத்தலில் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொறுப்பாளர் சபையின் பொருளாளர் ஏ.ஏ.சலீம், மற்றும் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

புனித புஹாரி சரீப் பாராயணம், கடந்த ஜனவரி 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒரு மாத காலமாக அதிகாலைவேளையில் ஊர் மக்கள், ஜமாஅத்தினர்கள் மற்றும் தனவந்தர்களின் பங்களிப்புடன் ஓதப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவனின் உயிரை காவுகொண்ட கல்குவாரி குட்டையை மூடித்தர பொதுமக்கள் கோரிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சென்னல் கிராமம் அறபா பள்ளிவாசல் பிரதேசத்தில் கல்குவாரியினால் உருவான ஆழமான குட்டையில் நீர் காணப்பட்டதினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவன் ஒருவன் குளிப்பதற்காக குதித்து உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றிருந்தது.


இப்பிரதேசத்தில் இச்சம்பவம் இனியும் இடம்பெறக்கூடாது என்பதற்காக சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.கபீர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்களான பீ.எம்.றியாழ், எஸ்.நளீம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல், மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் ஐ.எல்.றாசீக், கிராமசேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினருடன் குறித்த இடத்திற்கு திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அப்பிரதேசத்தில் வாழும் மக்களிடம் சென்று இக்குட்டை தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன், சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் மூடிதந்தால் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் பாதுகாக்க முடியும் என்று பொதுமக்கள் தவிசாளரிடம் தெரிவித்தனர்.

இதனை மூடுவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாக விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறு பிரதேச சபை செயலாளருக்கு பணிப்புரை வழங்கியதுடன், முடியுமான வரை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தவிசாளர் உறுதியளித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



மட்டக்களப்பு மாவட்டத்தில உள்ள ஏழைக்குடும்பங்கள் எல்லாத்துக்கும் 10 கிலோ அரிசி வழங்கப்போறாவாம் நம்மட அரச அதிபர். வழங்கிற அரிசிய தங்கட முயற்சிதான் எண்டு உரிமை கோர ரெண்டு அரைமந்திரிகள் இப்பவே கத உடுவானுகள் கவனம் அம்மா. எலக்சன் வந்தா துள்ளிக்கதைக்கிற கறுப்பு சட்டயும், முட்டவித்து மில்லியனாக்கிற மனிசனும் உள்ள மீன்பாடும் தேனாட்டில இனி என்ன கொற! நான் சொன்னது சரியா எலுவா?

# மட்டக்களப்பு வாவிக்கரையோரங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## பொதுமக்களை அவதானமாக இருக்கவும் அறிவுறுத்து

(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாவிக் கரையோரம் மற்றும் குளக்கரையோரத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் நீரேந்து பிரதேசங்களிலுள்ள கரைகளிலும் ஒதுக்குப்புறங்களிலும் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் கரையோரங்களில் நடமாடும் மீனவர்கள், சிறுவர்கள் மற்றும் கால்நடைகளை மேய்ப்பவர்கள், தங்களின் பாதுகாப்பை மேற்கொண்டு செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள், கரையோரம் நின்று வீசும் மீனவர்கள், வாவிகளிலும் குளங்களிலும் குளிக்கின்றவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு தங்களின் பெறுமதியான உயிரை பாதுகாத்துக்கொள்ளுமாறு பொதுமக்களை அவர் வினயமாக கேட்டுக் கொண்டார். மீன்பிடித்தொழிலை மேற் கொள்பவர்கள் உங்கள் வருகைக்காக உங்கள் குடும்பத்தின் மனைவி, மக்கள், உறவுகள் காத்திருக்கின்றன. இவ்வாறான அனர்த்தங்களை கருத்திற்கொண்டு மீனவர்கள் வாவிகளில் காணப்படும் முதலைகளின் நடமாட்டத்தை அலட்சியம் செய்யாமல் முதலைகளின் பிடியிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு மீனவர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வெருகல் தொடக்கம் துறை நீலாவணை வரையுமுள்ள வாவிக்கரைகள், மண்டூர் கவுடாதீவுக்கரை, நாதனையாற்றுப்பகுதி, கோடைமேடு-குருமண்வெளி ஆற்றுப் பகுதி, பட்டிருப்பு ஆற்றுப்பகுதிமுதல் மண்முனைப்பாலம் வரையான வாவிக்கரை யோரம், மட்டக்களப்பு லேக்வீதியில் வாவிக்கரை, மட்டக்களப்பு நகர்ப்புறப்பகுதிகளிலுள்ள நீரேந்து பிரதேசங்களிலும், துறைநீலாவணையிலுள்ள குமரப்போடியார் குளம், ஆண்டான்குளம், மில்குளங்களில்சுமார் 10இற்கும் மேற்பட்ட முதலைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மீனவர்கள், பொதுமக்கள் வாவிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கு அச்சப்படுவதாகவும், தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட சுமார் 100இற்கும் மேற்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

# களுவாஞ்சிக்குடியில் இரத்ததான முகாம்!





(கல்லடி செய்தியாளர்)

களுவாஞ்சிக்குடி மிலேனியம் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டிலும், களுவாஞ்சிக்குடி அஞ்சனா வைத்தியசாலையின் அனுசரணையுடனும் "மனிதனின் உயிர் அரியது. அதனைக் காக்கும் இரத்தம் பெரியது" எனும் தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை (26) களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இவ் இரத்ததான முகாமானது களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க.புவனேந்திரநாதனின் வழிகாட்டலின் கீழ்வைத்தியர்கள், தாதிய பரிபாலிகள், தாதிய உத்தியோகஸ்தர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகியோரின் பங்களிப்பில் நடைபெற்றது. இதன்போது மிலேனியம் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டுப்படுத்தும் நோக்கில் தனது பிரிவில் உள்ள பொலிஸ் நிலையந்தோறும் போதை ஒழிப்பு செயல்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் அரச பெரும்போக நெல் கொள்வனவு வேலைத்திட்டம்

(அப்துல்சலாம் யாசீம்)



2023/22 அரசாங்க பெரும்போக நெல் கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவுசெய்யும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமை (28) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

உயர்ந்தபட்ச ஈரப்பதன் 14 வீதத்தைக்கொண்ட உலர்ந்த நெல் ஒரு கிலோ 100 ரூபாவுக்கும் ஈரப்பதன் 14 வீதத்தைவிட கூடியதும் 22 வீதத்திற்கு குறைவான ஒரு கிலோ நெல் 88 ரூபாவுக்கும் கொள்வனவுசெய்யப்படும். பட்டிணமும் சூழலும், கந்தளாய், பதவிஸ்ரீபுர, சேருவல, குச்சவெளி மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட அரிசி ஆலைகள் மூலம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பின் கீழ் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படும்.

நெல்லை கொள்வனவு செய்த அரிசி ஆலை உரிமையாளர்கள் அதனை அரிசியாக குற்றி பிரதேச செயலகத்திற்கு வழங்க வேண்டும். குறித்த அரிசி எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ அரிசி என்றவாறு நிவாரண உதவியாக அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# ஜெனரேட்டர் கையளிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் குபா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் கல்முனையன்ஸ் போரத்திடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க, பள்ளிவாசலின் நீண்ட நாள் தேவையாக இருந்துவந்த ஜெனரேட்டர் தொகுதியினை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(26) அஸர் தொழுகையை தொடர்ந்து பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் மஹல்லாவாசிகளும் கல்முனையன்ஸ் போர பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

## மிகவும் நெருக்கமான நபரால் புட்டின் கொலை செய்யப்படுவார்



''ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், அவருக்கு மிகவும் நம்பிக்கையான நபரால் ஒரு நாள் கொலை செய்யப்படுவார்'' - என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போரில் ஏற்பட்ட பின்னடைவுகளால் புட்டினுக்கு நெருக்கமானவர்கள் அவர் மீது கடும் அதிருப்தியில் உள்ளதாக தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், ஸெலென்ஸ்கி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புட்டின், தனக்கு மிகவும் நம்பிக்கையானவர்களை உயர் பொறுப்புகளில் நியமித்துள்ளதால் ஸெலென்ஸ்கி கூறுவது சாத்தியமல்ல என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## இத்தாலி படகு விபத்தில் 24 பாகிஸ்தானியர்கள் பலி



இத்தாலிக்கு அகதிகளை ஏற்றிச்சென்ற படகு, கடலில் மூழ்கி 62 பேர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்தோரில் 24 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேதனை தெரிவித்துள்ளார்.

ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 140 பேருடன் துருக்கியிலிருந்து புறப்பட்ட அகதிகள் படகு இத்தாலி கடற்கரையை நெருங்கியபோது பாறைகளில் மோதி கடலில் மூழ்கியது.

81 பேர் நீந்திக் கரை சேர்ந்த நிலையில், 12 குழந்தைகள் உட்பட 62 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

## அமெரிக்க மாநிலங்களை சூறையாடிய புயல்



டெக்சாஸ், ஆக்லஹாமா, கேன்சஸ் போன்ற மத்திய அமெரிக்க மாநிலங்களை நோக்கி சக்திவாய்ந்த புயல்கள் நகர்ந்ததால் பல பகுதிகளில் சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேன்சஸ் மாநிலத்தில் மணிக்கு 112 கிலோமீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசுவதால் மின்கம்பங்கள் சாய்ந்து பல பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

## துருக்கியில் 5.6 ரிச்டர் அளவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

### இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பலி; 69 பேர் காயம்

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் 5.6 ரிச்டர் அளவில் நேற்றுமுன்தினம் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்த நிலையில் இடிபாடுகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 69 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி ஏற்பட்ட 7.8 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் இரு நாடுகளிலும் இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இலட்சக்கணக்கானோர் தங்களின் வாழிடங்களை இழந்து முகாம் வாசிகளாக மாறியுள்ளனர்.

தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், துருக்கியில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் காரணமாக அங்கு 34.2 பில்லியன் டொலர் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பாக பேசிய உலக வங்கியின் இயக்குநர் Humberto Lopez, நாடு எதிர்கொள்ளும் புனரமைப்பு மற்றும் மீட்புச் செலவுகள் எதிர்பார்ப்பதை விட இரண்டரை மடங்கு கூடுதலாக இருக்கும் என்றார்.

தற்போது மீட்புப் பணிகள் முடிந்து புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், துருக்கியின் மாலத்யா மாகாணத்தில் ஏற்பட்ட 5.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதில், இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பலியான நிலையில், 69 பேர் காயமடைந்தனர்.



## அகவை 70இல் மு.க.ஸ்டாலின்



தமிழக முதலமைச்சர் இன்று (01) தனது 70ஆவது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு அவரது நெருங்கிய நண்பரும் நடிகருமான ரஜினிகாந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

70ஆவது அகவையில் காலெடுத்து வைக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு பிரபலங்கள், அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் என பலரும் வாழ்த்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் நடிகர் ரஜினிகாந்த் ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூறி வீடியோ வெளியிட்டுள்ளார்.

அதில், ''எனது இனிய நண்பர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நீண்டநாள் நல்ல ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடன் இருந்து மக்கள் சேவை செய்யவேண்டும் என்று அவரது 70ஆவது பிறந்தநாளில் மனதார வாழ்த்துகிறேன்'' - எனத் தெரிவித்துள்ளார்.

## ஈரானில் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளை தடுக்க விஷம் வைத்த அடிப்படைவாதிகள்

ஈரானில் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளை தடுப்பதற்காக மத அடிப்படைவாதிகள் சிலர் அவர்களுக்கு விஷம் வைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவலில்,

''ஈரான் தலைநகர் தெஹ்ரானிலுள்ள கோம் பகுதியிலுள்ள பாடசாலைக்குச் சென்ற மாணவிகளுக்கு கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வயிற்றுவலி, தலைவலி, வாந்தி, மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மாணவிகளில் சிலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவப் பரிசோதனையில் அவர்கள் உடலில் நஞ்சு கலந்திருப்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து மாணவிகளுக்கு



விஷம் வைக்கப்பட்டுள்ள தகவலை ஈரான் கல்வித்துறை அமைச்சு உறுதிசெய்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோம் பகுதியிலுள்ள தீவிர மதவாதிகள், மாணவிகள் பாடசாலைக்குச் செல்வதை தடுப்பதற்காக விஷம் வைத்திருக்கலாம் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக ஈரானில் மாஷா அமினி என்ற இளம்பெண்ணின் மரணத்தைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. மூன்று மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தப் போராட்டத்தில் 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 15,000 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஈரான் தூக்குத்தண்டனை அறிவித்தது. ஆனால், இவற்றின் அதிகாரபூர்வ எண்ணிக்கை இதுவரை தெரியவில்லை.

மேலும், போராட்டக்காரர்களில் 400 பேருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்வினையாக ஐ.நாவின் பெண்கள் அமைப்பிலிருந்து ஈரான் நீக்கப்பட்டது. இந்நிலையில் ஈரானில் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளுக்கு விஷம் வைக்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

## துருக்கி நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்த குழந்தைகளுக்காக மைதானத்தில் குவிந்த ஆயிரக்கணக்கான பொம்மைகள்

துருக்கி நிலநடுக்கத்தில் உயிர் பிழைத்த குழந்தைகளுக்காக ரசிகர்கள் ஆயிரக்கணக்கான பொம்மைகளை உதைபந்து மைதானத்தில் வீசிய நெகிழவைக்கும் சம்பவம் நடந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை Besiktas மற்றும் Fraport TAV Antalyaspor அணிகளுக்கு இடையேயான சூப்பர் லீக் போட்டிக்கு முன் துருக்கி உதைபந்து ரசிகர்கள் ஆயிரக்கணக்கான டெடி பெயார்களை நன்கொடையாக வழங்கினர். துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்திலிருந்து உயிர் பிழைத்த குழந்தைகளுக்கு நன்கொடையாக டெடி பெயார் பொம்மைகள் உட்பட ஆயிரக்கணக்கான பொம்மைகளை போட்டியின்போது மைதானத்தில் வீசப்பட்டது.

தென்கிழக்கு துருக்கியில் கடந்த மாதம் 6ஆம் திகதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4:17 மணிக்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தின் நேரத்துக்கேற்ப, போட்டி 4 நிமிடங்கள் 17 விநாடிகளில் நிறுத்தப்பட்டது. அப்போதுதான் வோடபோன் பார்க் மைதானத்தில் ஆயிரக்கணக்கில் அடைக்கப்பட்ட பொம்மைகளை ரசிகர்கள் மைதானத்திற்குள் மழை போல் பொழிந்தனர்.




நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பதினொரு துருக்கிய மாகாணங்களின் உரிமத் தகடு எண்களுடன் ஸ்கோர்போர்ட் திரை ஒளிரும் போது வீரர்கள் பொம்மைகளை சேகரிக்க விரைந்தனர். துருக்கி மற்றும் சிரியா முழுவதும் 50,000இற்கும் மேற்பட்ட மக்களை பலிவாங்கிய பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு Besiktas அணியின் மூலம் பொம்மைகள் அனுப்பப்படும். பலியானவர்களில் கானா அணியின் வீரர் கிறிஸ்ரியன் அட்சுவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## பீபாவின் சிறந்த வீரர் மெஸ்ஸி; சிறந்த வீராங்கனை அலெக்ஸியா!

(ரமணி)

2022ஆம் ஆண்டின் சிறந்த பீபா ஆடவர் விருதை ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி வென்றார்.

லியோனல் மெஸ்ஸி - 52 புள்ளிகள், கைலியன் எம்பாப்பே - 44 புள்ளிகள், கரீம் பென்சிமா - 34 புள்ளிகள்

ஆர்ஜென்ரீனாவின் தலைமைப் பயிற்சியாளர் லியோனல் ஸ்கலோனி சிறந்த ஆடவர் பயிற்சியாளருக்கான விருதையும், எமிலியானோ மார்டினெஸ் சிறந்த ஆண்களுக்கான கோல்கீப்பர் விருதையும், ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் சிறந்த ரசிகர் விருதையும் முதன்முறையாக வென்றனர். 2022ஆம் ஆண்டின் சிறந்த மகளிர் வீராங்கனைக்கான விருதை ஸ்பெயினின் அலெக்ஸியா புடெல்லாஸ் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக வென்றார்.

பீபா தலைவர் கியானி இன்பான்டினோவின் தொடக்க உரைக்குப் பிறகு, டிசம்பர் 29, 2022 அன்று தனது 82ஆவது வயதில் காலமான பிரேசிலிய ஜாம்பவான் பீலேவுக்கு வீடியோ அஞ்சலியுடன் விழா தொடங்கியது. பீலேவின் மனைவி மார்சியா அயோகி பிரேசிலிய ஜாம்பவான் ரொனால்டோ மற்றும் ஜனாதிபதி இன்பான்டினோ ஆகியோரிடமிருந்து சிறப்பு அங்கீகார விருதைப் பெற்றார்.




சிறந்த மகளிர் கோல்கீப்பராக இங்கிலாந்தின் மேரி ஏர்ப்ஸ், சிறந்த மகளிர் பயிற்சியாளராக இங்கிலாந்து பெண்கள் தேசிய அணியின் சரினா விக்மேன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். நவம்பர் 6, 2022 அன்று தனது அணியான வார்டா போஸ்னன் மற்றும் ஸ்டால் ரெஸ்ஸோவுக்கு இடையேயான போட்டியில், கோல் அடித்த போலந்தின் கால்பந்தாட்ட வீரர் மார்சின் ஓலெக்ஸி, புஸ்காஸ் விருதை (சிறந்த கோல்) வென்றார். ஃபேர் பிளே விருதை ஜோர்ஜியாவைச் சேர்ந்த லூகா லோச்சோஷ்விலி வென்றார்.

## ஒரு ஓட்டத்தால் த்ரில் வெற்றிபெற்ற நியூசிலாந்து



இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வெறும் ஒரு ஓட்டத்தினால் த்ரில் வெற்றிபெற்றது.

வெலிங்டனில் நடைபெற்ற இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கு 435 ஓட்டங்கள் சேர்த்து டிக்ளேர் செய்தது. பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி 209 ஓட்டங்களில் சுருண்டு பொலோ-ஒன் ஆனது. இதனால் 226 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து 483 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 258 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதில் நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி 256 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

## ஹிதாயன்ஸ் கிண்ணம் 97 வசம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மீராவோடை அல்-ஹிதாயா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அணிகள் பங்குபற்றிய ஹிதாயன்ஸ் கிரிக்கெட் தொடரை 97ஆம் ஆண்டு அணி சுவீகரித்துக் கொண்டது.

குறித்த முக்கோண தொடரில் 1997, 1999, 2001ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர் அணியினர் பங்குபற்றினர். முக்கோண சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி வெள்ளிக்கிழமை (24) மாஞ்சோலை அல்-ஹிரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 97,99 ஆகிய இரண்டு அணிகள் மோதிக் கொண்டன. இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 97 அணியினர் 15 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய 99 அணியினர் 13ஆவது ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவிக்கொண்டனர்.

சுற்றுத் தொடரின் வெற்றிக் கிண்ணம் வழங்கும் நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரி.அஜ்மீர், கந்தளாய் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.மர்சூக், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எம்.பி.எம்.நபீர் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7